# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (13.08. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (141) அன்பளிப்பு: 60 p


*விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகு சனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சிகொண்டு போராட்டத்தில் பங்களித்தால் தான் எமக்கு வெற்றி நிச்சயம்.*

– தமிழீழத் தேசியத் தலைவர்

## 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை: என்ன நடக்கிறது?

பண்டைய கிரேக்கத்தின் முதல் மரதனோட்ட வீரனான அந்தத் தூதன், தனது இலக்கை அடைந்து – சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் 'ஜயசிக் குறுய்' மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப் போகின்றதா! அல்லது இடைநடுவிலே காணாமல் போகப் போகின்றதா?

**முழுவிபரமும் நடுப்பக்கத்தில் ....**



# ஓமந்தையில் பாரிய தாக்குதல்

✷ விமான – டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டது

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான 70 கிலோமீற்றர் விநியோகப் பாதையினை திறக்கப் புறப்பட்ட சிறிலங்காப் படையினர், படையெடுப்பு ஆரம்பமாகி மூன்று மாதங்கள் நெருங்குகின்ற நிலையில், 16 கிலோ மீற்றர்களை மட்டுமே கடந்து விடுதலைப் புலிகளின் இரும்புப் பிடிக்குள் சிக்குண்டு தவிக்கின்றனர்.

பாதை திறப்புதான் இல்லாவிட்டாலும் நெடுங்கேணியிலும் பெரியமடுவிலும் விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டுவிட்ட 55வது படையணியையும் 53வது படையணியையுமாவது புளியங்குளத்தை பிடிப்பதினால் இணைந்துவிட சிறிலங்கா பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. இந்த வகையில் மூன்றாவது தரைநகர்வு முயற்சியில் இறங்கிய சிறிலங்காப்படையினர் ஓமந்தையில் 135 படையினரை பலிகொடுத்து,

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## 73 பொதுமக்களை கிளிநொச்சி பகுதியில் காணவில்லை

கிளிநொச்சிப் பகுதியில் 73 பொதுமக்கள் 96ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கும் 97ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் இடையில் காணாமல் போயுள்ளதாக கிளிநொச்சிப் பிரஜைகள் குழு சர்வதேச மன்னிப்புச் சபையிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது. இவர்கள் குறித்து அறிந்து உதவும்படி கேட்டுள்ள பிரஜைகள் குழு, வீடுகளைப் பார்க்க, பொருட்களை எடுத்துவரவென தமது பழைய வீடுகளுக்குப் போகும் அப்பாவிப் பொது மக்கள் பலர் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டும் கைதாக்கப்பட்டும் மனித வதைக்கு உள்ளாக்கப்பட்டும் வருவதையும் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் சுட்டிக்காட்டி உள்ளது.

மேலும், நிராயுதபாணிகளான தமிழ் மக்களை அமைதியாக வாழ அனுமதிக்கும்படி தண்ணீரூற்று மற்றும் முள்ளியவளை பகுதிகளைச் சேர்ந்த ஐந்து பொது அமைப்புக்கள் கூட்டாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளன. இதில் சிறிலங்கா படையினர் நடத்தி வரும் நாசகார தாக்குதல்களும் அழிவு வேலைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ✷

## வெளிநாடுகளின் உதவிகள் நிலைமையை மோசமாக்கிறது

வெளிநாடுகள் சிறிலங்கா அரசிற்கு அளிக்கும் ஆயுத உதவிகள் – இராணுவப் பயிற்சிகள் என்பன இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல், மனிதாயத்துக்கு எதிரான் குற்றங்கள் என்பன சிறிலங்காவால் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை ஊக்கப்படுத்துகின்றது. எனவே, இன்றைய உலகில் மோசமான மனித உரிமை வன்முறைகளைக் கொண்ட நாடுகளுள் ஒன்றாகத் திகழும் சிறிலங்காவுக்கான சகல ஆயுத உதவிகளையும் பயிற்சிகளையும் நிறுத்துவதற்கு ஐ.நா. தனது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென, தற்பொழுது அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மட்டக்களப்பு சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோசப் பரராஜசிங்கம் கேட்டு வருகின்றார்.

திரு. பரராஜசிங்கம் அவர்களின் கோரிக்கை உரிய நேரத்தில் எழுப்பப்படும் அர்த்தமுள்ள

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## 3 மாதத்தில் 1000க்கு மேற்பட்ட படையினர் பலி 4000க்கும் மேற்பட்டோர் காயம்

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை சிங்களப் படைகள் ஆரம்பித்து மூன்று மாதமாகியும் இன்னும் அதனால் காற்பங்கு தூரம் கூட நகர முடியாது விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டு தவிக்கின்றது. இதுவரை 1000க்கும் அதிகமான படையினரை இழந்துள்ளதுடன் 4000க்கும் அதிகமான படையினர் காயமுற்ற நிலையில் போரில் ஈடுபட முடியாதவர்களாக வைத்தியசாலைகளில் முடங்கியுள்ளனர். அதேநேரம், புலிகளிடம் மேலும் பல அதிஉயர் நவீன ஆயுதங்களை இழந்துமுள்ளனர்.

இது இவ்வாறிருக்கையில், 'ஜெயசிக்குறு' நடவடிக்கைக்கென கிழக்கில் இருந்து படைகளை நகர்த்தியமையால் கிழக்கில் புலிகளால் மேலும் பல தமிழீழப்பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# தாயகம் காப்போம்

மூன்று மணி நேரத்தில் மூவாயிரம் 'ஆட்டிலறி'கள். ஆனாலும் விடுதலைப் புலிகளிடம் நவீன உயர் ரக ஆயுதங்களையும் ஆயுத – வெடிமருந்துக் களஞ்சியத்தையும் பறிகொடுத்த பரிதாப நிலை.

தோல்வியின் அகோரத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் சந்திரிகா அரசு, தனது இராணுவத்தின் பலம் பொருந்திய ஓமந்தைப் பகுதியிலேயே நூற்றுக்கணக்கான படையினரை பறிகொடுத்த பயங்கரத்தை வெளியே சொல்ல முடியாமல், வழமைபோல் தமது இழப்புக்களின் எண்ணிக்கையை குறைத்தும் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை அதிகரித்தும் செய்தி வெளியிட்டது. இருந்த போதிலும், விடுதலைப் புலிகள் நேர்மையான – உண்மையான முறையில் "126 விடுதலைப் புலிகள் வீரச்சாவு எய்தியுள்ளனர்" என அறிவித்தமை சிறிலங்காவின் பிரச்சாரத் தந்திரத்தை தவிடுபொடியாக்கிவிட்டது. அத்துடன் அநுராதபுரம் மருத்துவமனையில் 150க்கு மேற்பட்ட படையினர் காயங்களுக்கு சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளதையும் அதில் 20பேர் நிலை கவலைக்கிடமாய் இருப்பதையும் பி.பி.சி.யின் கொழும்பு முகவர் செய்தி வெளியிட்டமை புலிகளின் தாக்குதலின் அகோரத்தை உலகுக்கு எடுத்து விளக்கிவிட்டது.

மேலும், 'ஜெயசிக்குறு' நடவடிக்கை படையணி மீது விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இம் மூன்றாவது பாரிய தாக்குதலில் ஏழு முனைகளில் ஏக காலத்தில் புலிகள் போரிட்டனர் என சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடமே ஒப்புக்கொண்டுள்ளமை – புலிகள் மரபுவழி இராணுவமாக என்றுமே திகழும் ஆற்றல் உள்ளவர்கள் என்பதை உலகுக்கு மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினால் தமிழர் மண்ணில் தான் நினைத்த மாதிரி ஆக்கிரமிப்புப் போர்களை நடாத்த முடியாது என்பதற்கு சிறந்த சான்றாக – 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை குறித்தகால எல்லைக்குள் நிறைவேற்ற இயலாமை நன்றாக விளக்குகிறது.

இந்நிலையில், சந்திரிகா அரசிற்கு இராணுவத் தீர்வால் தமிழர் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதும் உறுதியாக விளங்க வைக்கப்பட்டு வருகிறது. எங்கள் மக்களின் வாழ்வுக்கு – உயிருக்கு – உடமைகளுக்கு ஊறு விளைவிக்கும் ஒரே காரணியாகிய சிறிலங்கா இராணுவத்தை, "விலக்கு அல்லது விலக்குவோம்" என்பதே தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்காவுக்கு திருப்பித் திருப்பி கூறும் ஒரே செய்தி. இராணுவத்தை விலக்கி அழிவுகளை தவிர்க்கும் நிலையில் சிறிலங்கா இல்லை. மாறாக, போரைத் தொடர்ந்து நடாத்தி சிங்கள மக்களின் வறுமையினைப் பெருக்கி தனது படைகளுக்கு ஆட்சேர்க்கலாம் எனும் நப்பாசையில் சந்திரிகா – ரத்வத்தை கூட்டணி தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பை அனுமதிக்கிறது. இந்நிலையில், இராணுவத்தை வெளியேற்றுவது ஒன்றே விடுதலைப் புலிகளின் கடமையாகிறது. அந்தக் கடமை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு தாண்டிக்குளம், பெரியமடு, ஓமந்தை என அடுக்கடுக்கான சான்றுகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இந்த தாயகம் காக்கும் பணி விரைவாக வெற்றிபெற, எமது உடன்பிறப்புக்கள் விரைவில் அமைதி வாழ்வு பெற, நாம் அனைவரும் தாயகம் காக்க எழுந்து நிற்க வேண்டிய நேரம் இது.

இது சிறிலங்காவுக்குத் தெரியும். அதனால் பல்வேறு நெருக்குதல்களை – நெருடல்களை சர்வதேச ரீதியிலும் சிறிலங்கா திட்டமிட்டு செயற்படுத்த தயங்கமாட்டாது. சிறிலங்காவின் இந்தச் சதித் திட்டங்களை முறியடிக்க என்னென்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதில் எம் மக்களுக்கு துணை செய்ய விடுதலைப் புலிகளின் சர்வதேச பணிமனைகளின் ஆதரவுடன் தாயகம் காக்கும் புனிதப் பணியில் இணைய இன்றே உறுதி பூணுவோம். இணைந்தவர்கள் மேலும் மேலும் பணியைப் பெருக்க உறுதி எடுப்போம். ✷

# ''இலங்கை பிரிவதற்கான நேரம் வந்துவிட்டது சர்வதேச சமூகம் அதனை அங்கீகரிக்க வேண்டும்''

## - ஜெனீவாவில் செல்வி கரன்பாக்கர்

**11-08-97** திங்களன்று சுவிஸ் ஜெனீவாவில், தமிழ் மக்களின் மாபெரும் எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றுள்ளது. சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பைக் கண்டித்தும் உலக அரங்கில் அதனை வெளிப்படுத்தும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பேரணியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஜெனீவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி, ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலைச் சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு பொதுக் கூட்டமும் நடாத்தப்பட்டது.

எழுச்சிப்பேரணி ஆரம்பமாவதற்கு முன்பாகக் காலையில், அனைத்துத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் திரு. ஜேம்ஸ்கரன் தலைமையில் செய்தியாளர் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமெரிக்காவைச் சேர்ந்த செல்வி கரன்பாக்கர் அவர்கள், இலங்கை பிரிவதற்கான நேரம் வந்துவிட்டது எனவும் அதனைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கொழும்பிலிருந்து வருகைதந்து மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச அமைதிப்பேரவையைச் சேர்ந்த திரு. அஜீத் ரூபசிங்கா அவர்கள், சிறிலங்கா அரச படைகள் தமிழ்ப்பகுதிகள் மீது நடத்திவரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதஉரிமை மீறல்கள் குறித்தும் பெரும் கண்டனம் தெரிவித்தார். ✷

# திருமலையில் இருவேறு தாக்குதலில் 9 படையினர் பலி

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ ரோந்து படை அணி சனிக்கிழமை காலை 8.55 மணிக்கு தாலிபை ஆற்றிலிருந்து குச்சவெளி நோக்கி செல்லுகையில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்காகியது. இதில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட பலர் படுகாயமடைந்தனர். எதுவித இழப்புகளுமின்றி தாக்குதலை நடாத்தி முடித்த விடுதலைப் புலிகள் ஒர தொடர்பு சாதனம் உட்பட ஏகேஎல்எம்ஜி ரக ஆயுதங்களையும் மற்றும் இராணுவ உபகரணங்களையும் கைப்பற்றி உள்ளனர். மேலும் வாலப்பாறு பகுதியில் ரோந்து அணி மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ✷


## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **12 - 09 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, LondonSE1 4QB.**



# இராணுவ விலகலே அமைதிக்கு ஒரே வழி

யாழ். குடாநாட்டில் அப்பட்டமான மக்கள் மீதான முற்றுகை, மனிதாயத்துக்கு எதிரான குற்றங்கள் சிறிலங்காப் படைகளினால் எவ்வித அச்சமும் இன்றி செய்யப்பட்டு வருகின்றன. காணாமல் போதல் – அதுவும் பள்ளிச் சிறுவர்கள் காணாமல் போதல் – உச்சக் கட்டம். நீண்ட இராணுவ வேலிகளால் குடாநாடே பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு மக்களின் சுதந்திர நடமாட்டம் தடுக்கப்பட்டு வாழ்வே சீர்குலைகிறது. இராணுவ ஆட்சி ஒன்றுக்கான அத்தனை அம்சங்களுடனும் குடாநாடு காணப் படுகிறது. ஆனால், பேச்சளவில் மக்கள் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறார்கள் என்கிறார்கள். வன்னிக்கு வந்தால் உணவை – மருந்தைக் கூட அங்கு நுழையவிடாது தடுத்து பகை நாடொன்றுடன் போரில் ஈடுபடும் பொழுது செய்யும் அத்தனை கொடுமைகளையும் செய்யும் சிறிலங்கா, இன்னும் வன்னியைத் தன் நாட்டின் பகுதி என ஏன் கூறுகிறதென பொருள் விளங்காது தவிக்கின்றன அங்கு கடமை புரியும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்.

இயற்கை அரண்களை, தேசிய வளங்களை, உட்கட்டுமானங்களை, கலை – கலாச்சாரத்தை, வரலாற்றை, ஆன்மீகத்தை அழித்தொழிப்பது! இதுதான் சந்திரிகாவின் தீர்வு. சந்திரிகாவின் முழுக்கவனமும் தமிழ் மக்கள் மேல் அல்ல. தமிழ் பிரதேசத்தில் தனது இறைமையை எப்படி மீளப்பெறுவது என்பதிலேயே தமிழர்களைச் சாகடித்தாவது அதனை நிலைநாட்டத் துணிந்துவிட்டார். ஆனால் தனது படைகள் தமிழர் இராணுவத்தால் சாகடிக்கப்படும் சரித்திரத்தைப் படித்துக் கொண்டிருக்கின்றார். ஆனாலும், திருந்த வில்லை – வருந்தவில்லை. அப்பாவிச் சிங்கள மக்களிடையில் மேலும் மேலும் வறுமை நிலையைப் போரால் தோற்றுவித்து மக்கள் தொழில் இன்றி வாடுகையில் தொழில் வாய்ப்பாக, இராணுவ ஆட்சேர்ப்பை நடாத்தலாமெனப் பகற்கனவு கண்டு வருகின்றார். சிங்கள மக்கள் போரின் சுமைகளைத் தாங்கித் துடிப்பதினால் ஏற்படக்கூடிய விளைவு களைத் தடுக்க இருக்கவே இருக்கிறார்கள் பௌத்த பிக்குகள். போரிற்கு ஆசிமழை பெறுகிறார் சந்திரிகா.



அமைதிக்கு கரம் கொடுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் : திணிப்புக்கு என்றுமே இடமில்லை

## சொல் என்ன செயல் என்ன

மன்னாரின் நிலையோ இன்னும் மோசம். அகதி முகாம்களில் பச்சைக் குழந்தைகள் துடிதுடித்து உணவின்றி மருந்தின்றி இறக்கின்றமை சாதாரண நிகழ்ச்சியாகியுள்ளது. திருகோணமலையை திரும்பிப் பார்ப்பவர்கள், அங்கே சிறிலங்கா அரச அதிபரே (சிங்களவர்) தமிழ் மக்களை அவர்களது குடியிருப்புகளில் இருந்து விரட்டி அடிக்கும் அலங்கோல ஆட்சியைக் காண்கின்றனர். மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்கள் இராணுவக் கொடுமையில் குளிக்கின்றன. கூட்டு மொத்தமாக முழுத் தமிழர் தாயகப் பகுதிகளுமே சிறிலங்காவின் இராணுவ பேயாட்சியில் சிக்குண்டு கிடக்கின்றன.

இந்த இராணுவ முற்றுகை விலகினாலே

**சிறிலங்கா பலத்தைக் கொட்டினால், புலிகள் பலத்தைக் காட்ட வைப்போம்.**

மக்கள் மூச்சுவிடுவர். உணவு உண்பர். மருந்து பெறுவர். சுருக்கமாகக் கூறினால் உயிர் வாழ்வர்.

இதனைச் செய் செய் எனப் பலமுறை சிறிலங்காவைக் கேட்ட புலிகள் இப்பொழுது செய்விக்கின்றார்கள். சிறுமுகாம்கள் மூடப்படுகின்றன. பெரிய முகாம்கள் இழக்கப்படுகின்றன. தமிழின வேட்டைக்கு புறப்பட்ட இராணுவங்கள் பாதி வழியில் திரும்பிப் போகவும் வழி தெரியாது நிறுத்தப்பட்டுள்ளார்கள். சுற்றிவர உள்ள தமிழர் குடியிருப்புக்கள் மீது குண்டுகளும் எறிகணைகளும் பொழிந்து "புலிகளை அழிக்க முடியாவிட்டாலும் தமிழர்களையாவது இனஅழிப்புச் செய்துவிட்டு திரும்பி ஓடுவோம்" எனும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். இந்த இனஅழிப்பு படிப்படியாகத் தமிழர்களை இன அழிப்புக்கு உள்ளாக்குவது – அவர்களின் பொருண்மிய பலத்தைச் சிதைப்பது – சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான வகையில், தமிழர் தாயகத்தின்

பிக்குகள் வாயிலாக, பௌத்த வெறியினூடாக – சிங்கள வெறியினூடாக, சிங்கள மக்களிடையில் போர்வெறி ஊட்டப்படுகிறது – வளர்க்கப்படுகிறது. போர் தொடர்கதையாகிறது.

தமிழ் இனத்தை அழிக்க நினைத்து தமிழர் இராணுவமாகிய விடுதலைப் புலிகளால் அது முடியாத நிலையில் சிங்கள இனத்தையும் அழித்தாவது ஆட்சியைத் தக்கவைக்க தாயும் மகளும் தவியாய் தவிக்கின்றனர். தந்தை – பண்டாரநாயக்கா கூறினார் "நாம் கொடுப்பதை பெறவேண்டியவர்கள் தமிழர்". ஆனால் சந்திரிகாவோ இன்னும் ஒருபடி மேலேபோய் சமாதானத்துக்கான போர், பாதை திறப்புக்கான முயற்சி

என்றெல்லாம் வேடமிட்டு, நாம் தமிழரை அழிக்க முடியாவிட்டாலும் தமிழரின் உட்கட்டுமானங்களை உருக் குலைத்துவிட்டால் உயிரோடு தமிழரைச் சாகடிக்கலாம்; இந்தவகையில், போரால் தமிழரின் அழகுத் தாயகத்தை – பசுமை வயல்களை, செழுமை கொண்ட கடல் வளங்களை, பெருமையுள்ள கல்வியை, திறமைமிகு சிறு கைத்தொழிலை, பழமை மிகு வியாபார முயற்சிகளை– எல்லாவற்றையுமே அழிக்கிறார் சந்திரிகா. கூண்டோடு தமிழர் பொருண்மியத்தைப் பிடுங்கி எறியும் முயற்சி – முழுத் தமிழரையும் படிப்படியாக அழிக்கும் இனப்படுகொலைகள் – இத்தனைக்கும் தலைமை வகித்து நடாத்தும் சந்திரிகாவின் நாடகமொழி – தீர்வுத்

**- அக்னஸ் -**

திட்டம் எனும் சர்வதேசப் பிரச்சாரம்.

பிரித்தானியாவை எடுங்கள். இங்கு போல்தான் அங்கும் பல்தேசிய இனப்பிரச்சினை – இது ஒரு பிரச்சாரம்.

ஆனால் பிரித்தானியாவின் வரலாறு வேறு; தமிழீழ வரலாறு வேறு. அதுதான் இருக்கட்டும். பிரித்தானியாவில் அயர் லாந்து புரட்சிகர இராணுவத்தின் செயற்பாட்டிற்காக, வடஅயர்லாந்து மேல் குண்டு வீசப்பட்டதா, எறிகணைகள் பாய்ச்சப்பட்டதா? 'பொருண்மியத் தடை கள்' என்று உணவும் மருந்தும் கூட செல்லாதவாறு தடுக்கப்பட்டதா? இல்லவே இல்லை. காரணம் பிரித்தானியாவின் பாராளுமன்ற ஜனநாயக அரசுகள் வடஅயர்லாந்து மக்களை குடிகளாக மதிக்கின்றார்கள். ஒரு தேசமாக பார்க்க முற்படுகின்றார்கள். ஆனால், சந்திரிகா அரசோ அல்லது வேறெந்த சிங்கள அரசோ தமிழர்களை குடிகளாகக் கருதவில்லை. இரண்டாந்தரப் பிரசை களாகவோ அல்லது நாடற்றவர்களாகவோ பார்க்கின்றார்கள். தமிழர்கள் ஜனநாயக ரீதியில் அரசாக செயற்படுவதற்குரிய உளவியல் நிபந்தனை சிங்கள அரசுகளால் முறியடிக்கப்பட்டுவிட்டன. தமிழர் தாயகத்தை பகை நாடாகக் கருது கின்றனர். தமிழர் எதிரிகளாக நோக்கப்படுகின்றனர். இதனால்தான் 1972 முதல் அரசற்ற தேச இனமாகத் திகழும் தமிழீழ மக்கள், தமது அரசியல் எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து, தமக்கான அரசியல் எதிர்காலத்தை உருவாக்கும் தேச நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் நாட்டைப் பிரிக்கவில்லை. வரலாற்று ரீதியாக தமது ஆட்சியில் இருந்த தங்கள் தாயகத்தை – தமிழீழத்தை, காலனித்துவ ஆட்சியா ளரிடம் இழந்த தமது அரசை – காலனித்துவம் உருவாக்கிய அந்நிய

## இன்னுமா தீர்வுத் திட்ட நாடகம்

அரசான சிறிலங்காவிடம் இருந்து மீட்பதற்கான தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களின் தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டு தமிழர் இராணு வமாகிய தமிழீழ விடுதலைப் புலிகளால் இலக்கை நோக்கிக் கொண்டு செலுத்தப்படுகிறது. இதுதான் வரலாறு. இதுதான் உண்மை. அதனால்தான் சர்வதேசத்திலும் உள்ள தமிழர்கள் – தமிழீழத் தேசிய விடுதலைப்

போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்குமாறு உலகை வற்புறுத்தி வருகின்றனர்.

இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டு உலக அங்கீகாரம் நெருங்கி வருகையில், அதனைச் சிதறடிப்பதற்கான சிந்தனை யுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நாடகத்தைத் தொடங்கிய சந்திரிகா – சர்வதேச ரீதியில், உண்மைக்கு மாறான பரப்புரைகளைச் செய்வதற்கான சுலோகங் களைத் தனது புத்திஜீவித்தனத்தால் இலகுவாக உருவாக்கி நெறிப்படுத்தி வருகிறார்.

அதேவேளை, தமிழரின் இராணுவ வலிமையைச் சிதறடிக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் இராணுவ பலத்தைக் கொண்டு ஆக்கிரமிப்புப் போரை முடுக்கிவிட்ட சந்திரிகா, தமிழரின் பொருண்மிய வலிமையினை வேரறுக்கும் நோக்கில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர்களின் பொருண்மிய வளத்தை முடக்குவதற்கான அத்தனை முயற்சிக ளையும் மேற்கொண்டு வருகிறார்.

சுருக்கமாகச் சொன்னால், இரு தேசமாக இலங்கைத் தீவை இனங்கண்ட சிறிலங்கா அரசு, தமிழர் தேசத்தை நிர்மூலமாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகிறது.

அதனால் இராணுவ ஆக்கிரமிப்பு என்பதே சிங்கள அரசின் நடைமுறைத் தீர்வாக என்றும் தொடரப் போகிறது. ஆகவே, இலங்கைத் தீவில் அமைதியை விரும்பும் எவரும் முதலில் செய்ய வேண்டிய வேலை – இந்த இராணுவ ஆக்கிரமிப்பை விலக்கும்படி சிறிலங் காவை நெருக்குவது ஒன்றே. இராணுவ விலகல் ஒன்றே அமைதிக்கான ஒரே வழி. இந்த வழி பின்பற்றப்பட்டாலே தீர்வுக்கான உண்மையான வழி பிறக்கும். இதனை சர்வதேச அமைதி விரும்பிகள் அனைவரும் உணர்ந்து செயற்பட வைக்க வேண்டிய பொறுப்பு புலம் பெயர் தமிழருடையது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# பெண்களை தனியே சோதனை இராணுவத்தினர் பாலியல் சேட்டை

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பெண்களை கணவன், தகப்பன், தமையன்மார் இல்லாத இடத்தில் - தனியே வைத்து -சோதனையிடத் தொடங்கியுள்ளனர். இந்நேரத்தில் உடல் முழுவதையும் அவர்கள் சோதனையிடுவதாகவும் அன்னேரத்தில் ஒரு பெண் இராணுவத்தினரோ, பொலிசாரோ கூட அங்கு இருப்பதில்லையெனவும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய நேரங்களில் பாலியல் சேட்டைகளில் சிறிலங்கா படையினர் ஈடுபடுவதாகவும் பின்னர் வெளியே கூறக்கூடாது என அச்சுறுத்தி அவர்களை அனுப்புவதால், இச்செய்திகள் வெளிவராது போய் விடுகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை பொலநறுவ - மன்னம்பிட்டிப் பகுதியில் இரவு - நடுச்சாமத்தில் தமிழர் வீடுகளுள் புகும் சிறிலங்கா இராணுவத்தினர், உறங்கும் பெண்களை - உடைகளைக்கூட மாற்றவிடாது - அலங்கோல நிலையில் தெருவோரங்களுக்கு கொண்டு சென்று விசாரிப்பதாகவும், இச்சமயம் சில பெண்கள் கடத்தப்படுகின்றனர் எனவும் இராணுவமுகாம்களில் இவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

# மக்களைத் துரத்தி வீடுகள் எரிப்பு

வாழைச்சேனை மயிலங்குறிச்சிப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக சிறிலங்கா படையினர் வன் முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு வந்தனர்.

இதன் பின்னர் ஆயுத முனையில் இப்பகுதியில் உள்ள மக்கள் அவர்களது வீடுகளை விட்டு விரட்டி அடிக்கப்பட்டனர்.

தற்பொழுது இப்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் 14 குடிமனைகள் சிங்களப் படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு சாம்பலாக்கப் பட்டுள்ளன. ✷

## 3 மாதத்தில் 1000க்கு மேற்பட்ட .......

*1996* சிங்கள புத்தாண்டிற்கு முன்னதாக ஒருவார காலத்துள் வடக்கையும் கிழக்கையும் கைப்பற்றிப் புலிகளை ஒடுக்கி விடுவோம் எனச் சூளுரைத்த சிங்களத் தலைமைகள் இன்று பெரியதோர் நெருக்கடிக்குள் தவிக்கின்றனர்.

"நெப்போலியனின் படைகள் ரஸ்ய மண்ணில் சிக்குண்டு பேரழிவுற்றமைபோல், சிங்களப் படைகள் வன்னிப் பகுதிக்குள் சிக்குண்டு பேரழிவுகளுக்கு உள்ளாகி வருவதாக" சிங்களப் படைகளின் கணிசமான இவ் இழப்புகளை பத்திரிகையாளர்கள் வர்ணித்துள்ளனர். ◆

## ஓமந்தையில் பாரிய ........

விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் மற்றும் டாங்கி எதிர்ப்புப் பீரங்கி உட்பட பெருந்தொகையான நவீன உயர்ரக ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் புலிகளிடம் பறிகொடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இத் தாக்கியழிப்பு ஆவணி 1ஆம் திகதி மாலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி ஏழரை மணித்தியாலங்களுக்கு மேலாகத் தொடர்ந்து குறித்த இலக்கை வெற்றிகரமாக நிறை வேற்றியுள்ளது. தாயகத்தை காக்கும் இப் புனிதப் போரில் 126 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். பெரும் ஆள் - ஆயுத இழப்புக்களை இந் நடவடிக்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் சந்தித்துவரும் சிங்களப் படையின் நிலையை மறைத்து சிறிலங்கா அரசு, வழமைபோல் தனது இழப்பின் எண்ணிக்கையைக் குறைத்தும் விடுதலைப் புலிகளின் இழப்பின் எண்ணிக்கையை மிகைப் படுத்தியும் பிரச்சாரத் தந்திரத்தில் இறங்கியது. ஆயினும், அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான - காயமுற்ற சிங்களப் படையினர்களின் எண்ணிக்கை சிங்களத்தின் இழப்பின் உச்சத்தைக் கோடிட்டு காட்டியுள்ளது.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைமைத்துவ செய்திகளின்படி, 66 பொலிசார், 49 தரைப்படையினர், 14 கடற்படையினர், 6 விமானப் படையினர் என கூட்டு மொத்தமாக 135 சிங்களப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், சிறிலங்கா தலைமைப் பீடமானது, ஏழு முனைகளில் புலிகள் தாக்குதல் நடத்தினர் என அறிவித்துள்ளமை - சிங்களப் படையினர் எத்தகைய மரபுவழி இராணுவ எதிர்ப்பை எதிர்நோக்குகின்றனர் என்பதை புலப்படுத்தியுள்ளது.

அத்துடன், புலிகளின் இரும்புப் பிடிக்குள் சிக்குண்டுள்ள படையினரை சிறிலங்கா திருப்பியெடுக்கத் தயங்கினால் மாரிகால காலநிலை புலிகளுக்கு சாத்தியமான சூழ்நிலைகளை தோற்றுவித்து சிறிலங்காப் படையினருக்கு பெரும் இழப்புகளை மேலும் ஏற்படுத்தும் என இராணுவ ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். ✷

## வெளிநாடுகளின் உதவிகள் ....

கோரிக்கை என புலம்பெயர் தமிழர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகள் எனும் அமைப்பின் தோற்றமே - சிறிலங்கா அரசுகள் தமிழர்களுக்கு இழைக்கும் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களில் இருந்து அவர்களை பாதுகாப்பதை - அவர்களுக்கு பாதுகாப்பான - அமைதியுடனான வாழ்வை, ஆட்சியை தோற்றுவிப்பதை மையமாகக் கொண்டது - எனக்கூறும் புலம்பெயர் தமிழர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெறுவதற்கு முன்பு, 1956இல் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் இன அழிப்புச் செய்யப்பட்ட கொடுமையையும் சுட்டிக்காட்டி சிறிலங்கா அரசே பயங்கரவாதத்தின் விளைநிலம் என்பதை உலகு உணர வேண்டும் என்கின்றனர். விடுதலைப் புலிகளின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டங்களில் 1977, 1981, 1983இல் நடாத்தப்பட்ட இனஅழிப்புக்களே விடுதலைப் புலிகளை தமிழர் இராணுவமாக மாறவேண்டிய தேவையை ஏற்படுத்தியது எனக்கூறும் புலம்பெயர் தமிழர்கள், இந்த வரலாற்று உண்மைகளை உணர்ந்தால் யோசப் பரராஜசிங்கம் தனது கோரிக்கையினை அனுபவ மொழியாகவே வெளியிட்டுள்ளார் என்பதை புரிந்து கொள்ளலாம் என விளக்குகின்றனர்.

இலங்கைத் தீவின் அமைதிக்கு சிறிலங்கா இராணுவத்தின் தமிழர் தாயக ஆக்கிரமிப்பு விலகலே ஒரே வழியாகும் எனத் தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்த கருத்துக் கொண்டுள்ளனர் எனவும், இது நடைமுறை சாத்தியமாவதற்கு யோசப் பரராஜசிங்கத்தின் ஆலோசனை அதி முக்கியமானது எனவும் கருத்துத் தெரிவிக்கின்றனர். ✷

## இராணுவ விலகலே .....

விடுதலைப் புலிகள் தீர்வுக்கு எதிரானவர்கள் அல்ல - ஆனால், இராணுவ பலம் மூலமான திணிப்புக்கு ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டார்கள். இராணுவத்தை விலக்கி தமிழீழ மக்களுடன் சமத்துவ நிலையில் பேச முற்பட்டால் சமாதானம் தானே மலரும்.

மாறாக, இராணுவ பலத்தைக் கொட்டி, விடுதலைப் புலிகளை அடக்கி, தமிழீழத் தேசிய விடுதலை போராட்டத்தை ஒடுக்கலாம் என சிங்கள அரசு தொடர்ந்து முயன்றால் - சர்வதேசத்திலும் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகளின் பலத்தைக் காட்ட வைப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சொந்தங்கள் அவலப் படுகையில் வேடிக்கை பார்க்கும் நிலையில் தமிழர் வாழ்ந்த காலம் மலையேறி வருகிறது. அள்ளிக் கொடுத்தும் உதவிகள் புரிந்தும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று அமைதியுடன் வாழும் காலம் உருவாக அனைத்துத் தமிழ் நெஞ்சங்களும் உழைப்போம். ✷

## கிருசாந்தியின் உறவினர் வீடுகள் மேல் சிறிலங்காப் படையினர் திட்டமிட்டு சூடு

கிருசாந்தியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி இனக்கொலை செய்த சிறிலங்காப் படையினர் அவரைத் தேடி வந்த தாயார், தம்பி, அயலார் ஆகியோரையும் கொன்றுவிட்ட வரலாறு அனைவரும் அறிந்ததே. தற்போது கிருசாந்தியினதும் அவருடன் கொலையுண்ட அயலவரதும் உறவினர்கள் மேல் சிறிலங்காப் படைகளின் கழுகுக் கண்கள் திரும்பியுள்ளது. இவர்களது வீடுகளை இலக்காக்கி கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகள் நடாத்தப் படுகின்றன. இதனால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இவ் அப்பாவிப் பொதுமக்கள் இது குறித்து இராணுவத் தலைமைகளுக்கு தெரிவித்தும் கூட, இந்தவிதமான அச்சுறுத்தல்கள் மேலும் அதிகரித்துவருவதாக அவர்கள்

யாழ் -குடாநாட்டில் கவலை தெரிவித்துள்ளனர். ✷


### தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்
### ஆரம்பிக்கும் புதிய வகுப்புக்கள்

சோதியா கலைக் கல்லூரியில்

- ❒ நடனம்
- ❒ வயலின்
- ❒ சங்கீதம்
- ❒ ஓகன் (கீபோட்)

ஆகிய வகுப்புக்கள் செப்டம்பர் மாதம் முதலாம் வாரம் ஆரம்பமாகின்றன.
தமிழ்ச் சோலையின் வழிகாட்டலில்
இளையோருக்கான தமிழ் மொழிக் கல்வியும்
செப்டம்பர் முதல் வாரமேஆரம்பமாகின்றது.

புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில்
வகுப்புகள் நடைபெறும்.

வகுப்புகள் நடைபெறும் இடம்:-

26, Rue de department
75018 PARIS
(metro : la Chapelle)

மேலதிக விபரங்களுக்கு: -
☎ 01 4358 1142

# கரும்புலிகள் சோழர்களின் கொள்ளுப் பேரர்கள்!
# உண்மை இது வெறும் புகழ்ச்சியில்லை

ஆண்டொருமுறை வரும் ஆடித்திங்கள் வரலாற்றுச் சிறப்புப் பெற்றது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு ஆடித்திங்களில்தான் தென்னிலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிரான மிகப் பாரிய இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இந்த, தமிழின சங்காரமே தமிழீழ விடுதலைப் போருக்கு வித்திட்டு அதனைக் கூர்மைப் படுத்தியது.

இந்த ஆடித்திங்களில்தான் (யூலை 23) விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் உரத்த சப்தத்துடன் முழங்க ஆரம்பித்தன.

முதல் முழக்கத்திலேயே பதின்மூன்று சிங்கள இராணுவத்தினர் களப்பலி எடுக்கப்பட்டனர்.

இந்த ஆடித்திங்களில்தான் (யூலை 26, 27) குட்டிமணி, தங்கத்துரை, டாக்டர் இராசசுந்தரம் உட்பட 53 அரசியல் கைதிகள் வெலிக்கடையில் சிங்களக் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

அதன்மூலம் சிங்கள–பௌத்த இனவெறி ஆட்சியாளரது சிறைக்கூடத்தில் கூட தமிழர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்ற உறைப்பான உண்மை தெளிவாக்கப்பட்டது.

ஆனால், இந்த இனப்படுகொலைகளுக்குக் கணக்குத் தீர்த்த நாள் யூலைத் திங்கள் 5ம் நாள் (05–07–87) ஆகும்.

அன்றுதான் முதற்கரும்புலி கப்டன் மில்லர் நெல்லியடி இராணுவ முகாமில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவ முகாமை நிர்மூலம் ஆக்கி சரித்திரம் படைத்தான்.

"இந்த மண் எங்களின் சொந்த மண்
இதன் எல்லைகள் மீறி யார் வந்தவன்"

என்று கேட்டு தமிழ் மண்ணை ஆக்கிரமித்து நின்ற சிங்கள இராணுவத்தின் உயிர்களைப் பலியெடுத்து தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை கப்டன் மில்லர் தொடக்கிவைத்தான்.

கப்டன் மில்லர் ஆரம்பித்து வைத்த கரும்புலிகளின் சகாப்தம் இன்றுவரை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இதுவரை 105 கரும்புலிகள் விடுதலைப் பாதையில் எதிரிகள் போட்ட தடைகளை உடைத்தெறிந்து களப்பலி ஆகியுள்ளனர்.

இன்று கரும்புலிகள் வாரம் என்றாலே எதிரிப்படை கிலிபிடித்துக் கிடக்கிறது.

விடுதலை பெற்ற தமிழீழத்தின் வரலாறு பொன்னெழுத்துக்களால் எழுதப்படும்போது கரும்புலிகளுக்கு என்று ஒரு தனி அத்தியாயம் ஒதுக்கப்படும் என்பதில் ஐயமே இல்லை.

கரும்புலிப் போர்வடிவம் என்பது இதுவரை உலகம் கண்டிராத அதியுன்னதமான, அற்புதமான, கற்பனையில்கூட எண்ணிப் பார்க்க முடியாத போர்வடிவமாகும்.

போரில் விழுப்புண் எய்துவதும், எதிரியின் வேல்பாய்ந்து களத்தில் விழுவதும் அன்று தொட்டு இன்றுவரை நாம் காணும் காட்சியாகும்.

ஆயுதமேந்தி களத்துக்கு ஏவும் ஒவ்வொரு வீரனும், வாழ்வுக்கு விடைகொடுத்துவிட்டு சாவுக்கு ஓலை எழுதிவிட்டுத்தான் போகிறான்.

வெற்றி அல்லது வீரசுவர்க்கம். இதுதான் போர் வீரனது தாரக மந்திரமாக இருக்கிறது.

வெற்றியென்றால் வீடு திரும்புகிறான். இல்லையேல் களத்தில் வீழ்ந்து நடுகல் ஆகிறான்.

ஆனால், கரும்புலி வீரன் வித்தியாசமானவன். சாவுக்கு வலிந்து தானே அழைப்பிதழ் அனுப்பிவிட்டு அதனைப் புன்சிரிப்போடு சந்திக்கிறான்.

நாட்டு விடுதலை என்ற மாபெரும் இலட்சியத்துக்காகக் கரும்புலி வீரன் தன்னை அழித்துக் கொள்கிறான்.

தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே. பிரபாகரனின் வார்த்தைகளில் கூற வேண்டும் என்றால், "கரும்புலிகள் எமது இனத்தின் தற்பாதுகாப்புக் கவசங்கள். எமது போராட்டப்பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள். கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்புபோன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக்காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்".

"மரணபயத்தை வென்றவன்தான் சுத்தவீரன்"

என்று கீதையில் குந்தி மகனுக்கு கண்ணபரமாத்மா உபதேசம் செய்கிறான்.

"ஆயுதங்கள் இவனை அரித்தெடுக்க முடியாது. நெருப்பு இவனை நீறாக்க இயலாது. தண்ணீர் இவனது தலையையும் நனைக்காது. காற்று இவனை உலர்த்தவும் முடியாது. பிளப்பதற்கு முடியாதவன், எரிப்பதற்கும், நனைப்பதற்கும், உலர்த்து வதற்கும் அரியவன். நிலையானவன். எங்கும் நிறைந்தவன். உறுதியுடையவன், அழியாத வன் இவன் என்றும் இருப்பவன்".

ஆத்மா அழிவற்றது, முடிவில்லாதது, பிறப்பற்றது, எல்லையற்றது, நிரந்தரமானது, பழமையானது, உடம்பு கொல்லப்பட்டாலும் ஆத்மா கொல்லப்பட முடியாதது என்பதை விளக்க கண்ணன் கொடுத்த விளக்கமாகிய கீதோபதேசம் கரும்புலிகளுக்கும் பொருத்த மானது.

இன்று எதிரிப்படையின் மனோபலத்தை உடைத்தெறியும் கரும்புலிகள் என்ற போராயுதம், மனிதக்குண்டு தேசியத்தலைவரின் கண்டுபிடிப்பு என்பது தெரிந்ததே.

இந்த வரலாற்றுத் தேவையின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி பற்றித் தேசியத்தலைவர் இப்படிக் கூறுகிறார்.

"நாம் இனஅழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய சமுதாயம். எமக்கு குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட (எதிரிகள்) உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது.... பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன்".

விடுதலைப்பாதையில் எதிரிபோடும் தடைகளை உடைத்தெறிய கரும்புலி கப்டன் மில்லரின் அளப்பரிய ஈகை இன்றுவரை தொடர்கிறது.

நிலத்தில் மட்டுமல்ல, நீரிலும் தொடர்கிறது. எமது வாழ்விடமான வடக்கும் கிழக்கும் மட்டும்தான் தமிழீழ தாயக பூமி அல்ல.

பழமையும், பெருமையும், செழுமையும், சீரும் சிறப்பும் புகழும் கொண்ட தமிழீழக் கடலும் தமிழர் தாயகம்தான்.

தமிழீழக் கடல் எல்லையை மீறி உட்புகுந்த சிங்களக் கடற்படைக்கு கரும்புலிகள் கடலில் வைத்துக் கல்லறை காட்டியிருக்கிறார்கள்.

10–07–90 வடமராட்சிக் கடலில் நங்கூரமிட்டிருந்த "எடித்தார" வை கடற் கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோர் தாக்கிச் சேதப்படுத்தினார்கள்.

04–05–91 கரையிலிருந்து சுமார் எட்டு மைல் தூரத்தில் நின்ற "அபிதா" வை கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் தாக்கி அழித்தார்கள்.

28–08–93 கிளாலிக் கடலில் "பி115", "பி121" வோட்டர் ஜெற் படகுகளை மேஜர் வரதன், கப்டன் மதன் தாக்கி அழித்தார்கள்.


29–08–93 தமிழீழ வடகடலில் அத்துமீறி வந்துகொண்டிருந்த டோரா பீரங்கிப் படகை கடற் கரும்புலிகள் மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் தாக்கி மூழ்கடித்தார்கள்.

16–08–94 காங்கேசன்துறைக் கடலில் கட்டளைக் கப்பலை கடற்கரும்புலி அங்கயற்கண்ணி தனியொருவளாக 17 கடல் மைல்களை (35மைல்) நீந்திக்கடந்து நிர்மூலமாக்கினார்.

19–09–94 கடல் அரக்கன் சாகரவர்த்தனாவை கற்பிட்டிக் கடலில் வைத்து கடற்கரும்புலிகள் லெப். கேணல் நளாயினி, நளாயினி படையணியின் நாயகி மேஜர் மங்கை, இந்த இருவருடனும் கப்டன் லக்ஸ்மன், கப்டன் வாமன் தகர்த்தெறிந்தார்கள்.

19–04–95 திருமலைத் துறைமுகத்தில் வைத்து சூரயா, ரணசுறு கப்பல்களை கடற்கரும்புலிகள் மேஜர் மதுசா, கப்டன் சாந்தா, மேஜர் கதிரவன், மேஜர் தணிகைமாறன் துவம்சம் செய்தார்கள்.

03–09–95, 20–09–95, 02–10–95, 17–10–95



இப்படிக் கடலில் காவியம் படைத்த கடற்கரும்புலிக் கதாநாயகர், நாயகிகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

இதுபோலவே, நிலத்தில் காவியம் எழுதிய கரும்புலிகளின் பட்டியலும் நீண்டதாகும்.

இன்று சிங்கள–பௌத்த இனவாதிகளின் நித்திரையைக் கெடுப்பவர்களாக விடுதலைப் புலிகளும், கரும்புலிகளும் உலா வருகிறார்கள்.

பார்க்கும் இடமெல்லாம் சிங்களச் சிறிலங்காவின் முப்படைக்கும் நீக்கமற, அங்கிங்கு என்னாதபடி எங்கும் விடுதலைப் புலிகள் வியாபித்துக் காட்சி அளிக்கிறார்கள்.

தமிழீழக் கவிஞர் புதுவை இரத்தின துரையின் கவிதை வரிகளில் சொல்ல வேண்டும் என்றால்,

"பகைவனே படுக்கையைத் தட்டிப்பார்,
கட்டிலுக்குக் கீழே கரும்புலி இருப்பான்."

பாம்பு கடித்து பக்கென்று உயிர் போனால் இறந்தவனுக்கு வேதனை இல்லை.

ஆனால் தலைமேல் வாள் எப்போதும், தொங்கிக்கொண்டிருந்தால் மரணபயத்தால் உயிர்போய் வந்துகொண்டு ஊசலாடும்.

தமிழினத்தின்மீது ஒரு ஆக்கிரமிப்புப்போரை கட்டவிழ்த்து விட்டிருக்கும் சனாதிபதி சந்திரிகா, துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, தளபதி றொகான் தழுவத்த, சிங்கள சிப்பாய்கள் எல்லோருமே இந்த மரணபயத்தோடுதான் இருக்கிறார்கள்.

இது அவர்கள் கூற்றுவனை விலை கொடுத்து வாங்கிய கதைபோன்றதுதான்.

**- நக்கீரன் -**

சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் பிடிவாதமாக மறுத்து வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் வீரத்தையும், விவேகத்தையும், இலட்சியத்தையும், நாட்டுப் பற்றையும் தற்கொடையையும் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் சோழர்களின் கொள்ளுப் பேரர்கள். பாண்டியன் பரம்பரை. சேரனின் சொந்தக் காரர்கள். என்பதை எண்ணிப்பார்க்க மறுத்து விடுகிறார்கள்.

பண்டைத் தமிழர்கள் ஆராதித்துப், போற்றியதும், பாராட்டியதும் இரண்டு.

ஒன்று காதல், மற்றது வீரம். இந்த இரண்டையும் உள்ளடக்கியதுதான் தமிழர்களது வாழ்வியல். தமிழன் படைத்த இலக்கியம் காதல், வீரம் இந்த இரண்டையும் பற்றியதே.

இறந்த குழந்தைகள் வாளால் இரண்டாக வெட்டியபின் அவர்கள் உடலைப் புதைத்தவர்கள் சங்கத்தமிழர்கள்.

"போர் எனில் புகலும் புனைகழல் மறவர், காடிடைக்கிடந்த நாடுநனி சேஎய செல்வோம், அல்லேம்" என சூழுரைத்தவர்கள் தமிழ் மறவர்கள்.

"போர்" என்றால் "யாம்" எனக்கூறி எழுபவர்.

"சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுளனோ? என வினவுதி, என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன், ஓடும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல,
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ, போர்க்களந்தானே!!
(புறம் 86)

என்று வீரத்துக்கு லாலி பாடியவர்கள் தமிழ்த் தாய்மார்கள். "வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப், பாறாமயிர்க் குடுமி எண்ணெய் நீவி ஒருமகன் அல்லது இல்லோள், செருமுக நோக்கிச் செல்க என் விடுமே! என்று தனது ஒரே மகனது கையில் வேல்கொடுத்து "போர்க்களம் புகுது! என வாழ்த்தி விடை கொடுத்தவர்கள் தமிழ்த் தாய்மார்கள்.

"போர்க்களத்தில் விழுப்புண் படாத நாட்கள் வீண் நாட்கள்" என எண்ணியவர்கள் தமிழ் மறவர்கள்".

தமிழ் வீரர்களுக்கு உயிர் துச்சமாக இருந்தது. தன் மன்னன் போரின் கண் இறந்தமை பொறாது ஒரு வீரன் அக்களத்திலேயே தனது உயிரைப் போக்கியதை புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் பாடல் விளக்குகிறது.

"வானம் இறைவன் படர்ந்தென வாள்ளுப்பா, மானமே நெய் மறம் விறகாகத்– தேனிமிரும் கள்ளவிழ் கண்ணிக் கழல் வெய்யோன் வாளமர் ஒற்றலுள் வேட்டான் உயிர்".

(வண்டுகள் படரா நின்ற தேன் துளிக்கும் மாலையினையும் வீரக் கழலினையும் உடைய வெவ்விய மறவன் தன் மன்னன் களத்தில் வீழ்ந்து விசும்பிடத்தே சென்றானாக, வாட்போராகிய தெள்ளிய நெருப்பின் கண் தனது தறுகண்மையே விறகாகவும், தனது மானப் பண்பே நெய்யாகவும், தனது வாளே துடுப்பாகவும் கொண்டு தனது உயிரை வேள்வி செய்தான்.)

எனவே பெருமிதம் (வீரம்) தமிழர்களுடைய குருதியோடும் ஊனோடும், உயிரோடும் ஒட்டியிருப்பது. இடையில் பட்டுப்போய் இருந்த இந்தப் பெருமிதத்தை மீண்டும் கொழுந்து விட்டு எரிய வைத்திருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

கரும்புலிகள் சோழர்களின் கொள்ளுப்பேரர்கள்!

உண்மை இது வெறும் புகழ்ச்சியில்லை.! ✷



# சிறிலங்காவின் ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கையை எதிர்த்து 01-08-97 அன்று ஓமந்தையில் இடம் பெற்ற திடீர்த்தாக்குதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட 126 மாவீரர்களில் 88 பேரின் விபரம்

1. செண்பகச்செல்வி/ மகேந்திரா
பழனிமுத்து தனலட்சுமி
வட்டக்கண்டல், மன்னார்.

2. வெண்மலர்
அல்லி யோகராசா கமலாதேவி
யாழ்ப்பாணம்.

3. விதுபால்
நவரட்ணம் சசிகலா
யாழ்ப்பாணம்
த.மு. மகிழ்ச்சிபுரம், மல்லாவி.

4. அருள்நிதி
மகேந்திரன் கௌசலா
3ம் வட்டாரம், முள்ளியவளை
த.மு. முத்துஜயன்கட்டு.

5. ஜெயஜோதி
கனகலிங்கம் விஜித்தா
யாழ்ப்பாணம்
த.மு. கல்வெட்டித்திடல்,
புளியம்பொக்கணை.

6. சுபந்தினி
தங்கராசா ராதிகா
யாழ்ப்பாணம்.

7. சோபா
நாராயணசாமி சுபா
யாழ்ப்பாணம்
த.மு. உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

8. பிரபா
செல்லத்துரை மாலதி
யாழ்ப்பாணம்.

9. ராமா/ கலைக்குயில்
ராசு சிவனேஸ்வரி
4ம் ஓடை, மருதநகர்,
கிளிநொச்சி
த.மு. 154ம் கல்,
வசந்தநகர், முறிகண்டி

10. வெண்ணிலவன்
கணபதிப்பிள்ளை பத்மநாதன்
யாழ்ப்பாணம்.
த.மு. 5ம் வட்டாரம்
, இரணைப்பளை,
புதுக்குடியிருப்பு

11. ஈழப்பிரியா
ஆறுமுகம் ஜெனற்
கிருஷ்ணபிரியதர்சினி
யாழ்ப்பாணம்.

12. ஆனந்தி
திரவியம் சரோ
யாழ்ப்பாணம்.

13. துலாஞ்சினி/லதா
முத்தையா மதிரினா
அருள்மணி
பூவரசங்குளம், வவுனியா.

14. கோமதி
சின்னத்துரை சர்மிளா
யாழ்ப்பாணம்.

15. கமலேந்தினி
சுந்தரமூர்த்தி சுதாதேவி
திருகோணமலை..

16. பாபு/இளங்குமரன்
பேரானந்தம் ஜெயராஜ்
மட்டக்களப்பு.

17. கிருபைராஜா
இளையதம்பி மனோகரன்
மட்டக்களப்பு

18. விமல்காந்தி
கதிர்காமப்போடி கிருபைராஜ்
மட்டக்களப்பு.

19. வேணுஜன்
அரசரட்ணம் சுதர்சன்
மட்டக்களப்பு.

20. கதிரவன்
சின்னத்தம்பி சச்சிதானந்தம்
மட்டக்களப்பு.

21. வேந்தகரன்
சதாசிவம் சுந்தரலிங்கம்
மட்டக்களப்பு.

22. கவியழகு/கவிவண்ணன்
சுகந்திராஜ் கண்ணன்
மட்டக்களப்பு.

23. இசைரூபன்
தருமன் நிசாந்தன்
மட்டக்களப்பு.

24. ஏதிராஜ்
வடிவேல் கோகிலராஜ்
மட்டக்களப்பு.

25. நவச்செல்வம்
தேவராசா விக்னேஸ்வரன்
மட்டக்களப்பு.

26. நூதகன்
அப்பாத்துரை கஜகுமார்
மட்டக்களப்பு.

27. மதூசனன்
கார்த்திகேசு நாகராஜ்
மட்டக்களப்பு.

28. துகிலன்
கந்தசாமி சிவக்குமார்
மட்டக்களப்பு.

29. நிர்மலன்
சிவராசா சுவிகாந்தன்
மட்டக்களப்பு.

30. ரவிசீலன்
குருநாதபிள்ளை
கோணேஸ்வரன்
மட்டக்களப்பு.

31. பாவண்ணன்
மயில்வாகனம் சங்கரதாஸ்
மட்டக்களப்பு.

32. தரணியாழன்
வேல்முருகு ஜெபநேசன், மட்டக்களப்பு.

33. பிரியமஞ்சன்/பிரகலாதன்
நாகராசா ஜெயகனேசன்
அம்பாறை.

34. வேலன்
சண்முகராசா சபேசன்
42, ரத்தினபுரம், கிளிநொச்சி

35. மதியழகன்
சிதம்பரம் நடராசா
மடு வீதி, மன்னார்.

36. அழகியநம்பி
கருணதாஸ் அஜித் விஜியதாஸ்
திருகோணமலை.

37. சஞ்சீவி
சின்னையா முத்துகிருஷ்ணன்
95, பிரிவு 2, தர்மபுரம், கிளிநொச்சி

38. நெல்சன்/ கரிகாலன்
பெஞ்சமின் சகாயநாதன்
மன்னார்.

39. முருகையன்/நியூமன்
ராஜு சவுந்தராஜன்
வவுனியா.

40. தொண்டமான்
பெரியதம்பி சோதரராசன்
யாழ்ப்பாணம்.
த.மு. அம்பலபெருமாள் சந்தி,
கிளிநொச்சி.

41. அற்புதன்/அறிவொளி
கதிரேசன் மகேந்திரம்
கண்டி.
த.மு. கனகராயன் குளம்,
வவுனியா.

42. நாகமணி
அப்பையா கலையழகன்
யாழ்ப்பாணம்.

43. முத்தமிழன்
நவரட்ணம் வசந்தன்
திருகோணமலை
த.மு. எ.ஜி.முகாம்,
இடது பக்கம்,
முத்துஜயன் கட்டு.

44. தீந்தமிழ்செல்வன்
கனகரட்ணம் ராஜன்
யாழ்ப்பாணம்.

45. திருமகன்
வேலுப்பிள்ளை கலாநிதி
யாழ்ப்பாணம்.

46. எழிலரசன்/வித்தரன்
பஞ்சலிங்கம் பாலமுரளி
யாழ்ப்பாணம்.

47. தங்கத்துரை சிட்டு
சித்தம்பலம் அன்னலிங்கம்
யாழ்ப்பாணம்.
த.மு. வல்லிபுரம்,
புதுக்குடியிருப்பு.

48. சோழன்
பாலசுப்பிரமணியம் சுவிகாந்தன்
யாழ்ப்பாணம்.

49. கலைக்குயில்
முனியாண்டி பெரியதம்பி
கண்டி.

50. அப்பன்
தேவதாஸ் கிருஷாந்தன்
யாழ்ப்பாணம்.

51. நாயகன்
தெய்வேந்திரன் சீலன்
யாழ்ப்பாணம்.

52. மலர்விழி
கனகலிங்கம் சுதாஜினி
ஆனைவிழுந்தான்,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி

53. தமிழவள்
மேரி மெலிரோன் சுதர்சினி
உயிலங்குளம், மன்னார்
த.மு. மடு அகதிமுகாம், மன்னார்

54. கலைவாணி
ரெங்கசாமி கமலினி
இரணைமடு சந்தி,
பாரதிபுரம், கிளிநொச்சி

55. கடலரசி
திருப்பதி திலகராணி
சுண்டிக்குளம், விசுவமடு

56. ஈழத்தமிழன்
பத்மநாதன் மதியழகன்
யாழ்ப்பாணம்
த.மு. சுரேஸ் வீடமைப்புத்திட்டம்,
காய்வெளி, புதுக்குடியிருப்பு.

57. உருத்திரன்
சிவபாதம் சிவாகரன்
யாழ்ப்பாணம்.

58. கற்பகன்
கந்தசாமி பராக்கிரமராசா
பெரிய பண்டிவிரிச்சான், மன்னார்

59. வேணுகா
கணபதிப்பிள்ளை திருச்செல்வி
யாழ்ப்பாணம்
த.மு. முத்துஜயன்கட்டு

60. மதி
சிவகணநாதன் விமலா ரத்தினேஸ்வரி
மன்னார்

61. சொரூபி
தங்கவேலு ஜெனிற் சுஜந்தா
பெரியமடு , பண்டிவிரிச்சான்
த.மு.பாடசாலை வீதி, மடு தேவாலயம்,
மன்னார்

62. யாழிசை
வல்லிபுரம் கிரியன்
யாழ்ப்பாணம்.
த.மு.10ம் ஓடை,
உருத்திரபுரம், கிளிநொச்சி

63. பாலகிருஷ்ணன்
ரத்தினகோபால் அகிலன்
யாழ்ப்பாணம்

64. அன்புவரதன்
சுந்தரம் மோகனேந்திரம்
அம்பாறை

65. சந்தனா
சிவகுருநாதன் ஜெயந்தினி
யாழ்ப்பாணம்
த.மு. உடையாரகட்டு, புதுக்குடியிருப்பு

66. சேரமுதன்
சிவன் சிவரூபன்
யாழ்ப்பாணம்
த.மு. செல்லக்குட்டி கமலாகரன்
மருந்துக்கடை அருகில்,
வன்னேரிக்குளம்

67. வித்தகா
சிவகுரு சிவகாந்தி
13, திருநகர், கிளிநொச்சி
த.மு. 10ம் கட்டை, இமாஸ்நகர்,
அக்கராயன்

68. கோன்
சண்முகம் பழமுருகன்
யாழ்ப்பாணம்
த.மு. 767 சில்வா வீதி, வட்டக்கச்சி

69. தமிழேந்தன்/ரவிவர்மன்
சிவராசா சிவக்குமார்
யாழ்ப்பாணம்

70. உதயமலர்
ராஜேந்திரம் தவரஜனி
யாழ்ப்பாணம்
த.மு. வசந்தநகர், முருகண்டி

71. அமலி
அரியரத்தினம் மேரி கிருஷாந்தி
மன்னார்

72. இளவழுதி
சண்முகம் சுரேஸ்குமார்
யாழ்ப்பாணம்
த.மு.புதுக்குடியேற்றம், மாங்குளம்

73. கயல்விழியன்
தேவராஜா ரவிகரன்
அம்பாறை

74. கல்யாணி
குணரட்ணம் மதிவதனி
திருகோணமலை
த.மு. மே/பா . சின்னராசா சம்பாசிவம் /
வீமன்,
முள்ளியவளை, புதுக்குடியிருப்பு

75. நவாநந்தம்
கோபாலபிள்ளை சசிக்குமார்
அம்பாறை

76. சித்திராஜன்
சிறீராமன் திவாகரன்
மட்டக்களப்பு



77. பிரமிணன்/வரதன்
கணபதிப்பிள்ளை
ராசரட்ணம்
மட்டக்களப்பு

78. சின்னக்குட்டி
செல்வராசா மகேந்திரம்
பாரதிபுரம், விசுவமடு

79. திவ்வியநாதன்
பெரியதம்பி நகுலேந்திரம்
மட்டக்களப்பு

80. ஈழச்செல்வன்
தர்மலிங்கம் கோகிலநாதன்
மட்டக்களப்பு

81. பழனிராஜ்
கனகசூரியம் சிறீதரன்
மட்டக்களப்பு

82. ஈழவாசன்
விஸ்வலிங்கம் சுரேஸ்
யாழ்ப்பாணம்

83. காவியன்
அரியநாயகம் ஜெனற்
யாழ்ப்பாணம்

84. கிளியன்
கந்தசாமி விஸ்வநாதன்
வட்டக்கச்சி, சிலையடி

85. செந்தூரன்/செல்லப்பா
அருளானந்தம் ஜெயக்குமார்
யாழ்ப்பாணம்

86. சிவானந்தம்
ராசேந்திரம் அன்ரன் ஜேசுராசா
அலம்பில், முல்லைத்தீவு
த.மு. மடு அகதிமுகாம், மன்னார்

87. இசைத்தேவன்
செபஸ்தியாம்பிள்ளை திருச்சந்திரன்
பரநாட்டகல், ஓமந்தை

88. அமுதரசன்
ஸ்ரனிஸ்லாஸ் அன்ரனி கனியூர்
யாழ்ப்பாணம்
த.மு. 4ம் வட்டாரம், இரணைப்பளை.

## காவல் தெய்வங்கள்

**ம**ற்றவர் வாழ்விற்காக
மண்ணிலே புதைந்த
வீரமறவர்கள்.
நாங்கள் வாழ
உருகி ஒளிர்ந்த மெழுகுகள்.
இரவில் விழியுறங்காது
கால் கடுக்கவிருந்து
இருளை விரட்டி
விடியலை விடுவித்தவர்கள்.
அகதியாய் அலையாமல்
தமிழனின் புதிய வரலாற்றை
எழுதிய
காவிய நாயகர்கள்.

முகம் தெரியாத
இருட்டு வாழ்க்கைக்கு
இடமளிக்காமல்

போருக்கு புறப்பட்ட
புரட்சிப் பூக்கள்.
தமிழீழ எல்லைக்கே
வேலியாய் நிரைத்த
எல்லையோரக் காவலர்கள்.
தாயவள் விலங்குடைக்க
தன்னுயிர் ஈய்ந்திட்ட
தற்கொடையாளர்
நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்.

— **நன்றி** '*சூரியப்புதல்வர்கள்*'.

# "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை:

கட்டடக் கவசங்களையும் குறுக்கும் நெடுக்குமான குச்சொழுங்கைப் பாதை களையும் கொண்ட யாழ்ப்பாணச் சமர்க்களத்தைப் போலல்லாது, வான்படையும் அந்தப் பின்கள உதவிகளை (Logistical Support) தொடராக வழங்கக்கூடிய வகையில் இன்றில்லை.



கவசங்களற்ற நிலப்பரப்பையும் ஒரு சில பாதைகள் என்றில்லாமல் எதையுமே பாதையாக்கக் கூடிய தரை அமைப்பையும் உடைய வன்னிச் சமர்க்களம் தனித்துவமானது. சாதகங்களையும் – பாதகங்களையும் ஒருங்கே கொண்ட வித்தியாசமான மரபுப் போர் அரங்கம் இது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற உதவிய அதே மரபுப் போர்ப்பலம், வவுனியா – கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றவும் கட்டாயம் உதவும் என்று சிங்களப் படைத் தளபதிகள் கணித்திருந்தனர்.

பாதை இருமருங்கும் டாங்கிகள் குண்டுகளைப் பொழிந்தபடி முன்னேற – பின்புலத்திலிருந்து 'ஆட்டிலறி'கள் எறிகணைகளை அள்ளி இறைக்க – மோட்டார் குண்டுகள் விழுந்து வெடிக்க, இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து, புலிகளையும் அவர்களது நிலைகளையும் உடைத்தெறிய – உடைந்த நிலைகைள நோக்கி நகரும் படையினரின் துப்பாக்கிகள் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, யாழ்ப்பாணச் சமரைப் போலவே, 'ஜெயசிக்குறு'வும் வெற்றியில் முடியும் என்று சிங்களத் தளபதிகள் எதிர்பார்க்கின்றனர்.

சரியாக ஒருவருடத்திற்கு முன் நடாத்தப்பட்ட 'சத்ஜெய' – உண்மையில் – ஆனையிறவு – வவுனியா பாதை திறப்பின் ஆரம்ப முயற்சியாகும். முல்லைத்தீவில் படையினரின் தோல்வியை ஈடுகட்ட அவசரமாகச் செய்யப்பட்ட நடவடிக்கை அது என்றாலும், அதைத் தொடரவிடாமல் சில இராணுவக் காரணிகள் தடையாக இருந்துவிட்டன.


ஆனையிறவுத் தளத்தைப் பின்தளமாகக் கொண்டு நடாத்தப்பட்ட 'சத்ஜெய' சமரின்போது சிங்களப் படைகள், தமது விநியோகம் மற்றும் மருத்துவ விடயங்களில் பாரிய சிரமங்களைச் சந்தித்தன. குறிப்பாக, காயம் அடையும் படையினரை தென்பகுதி வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்வதிலும் – புதிய படைப் பிரிவுகளை தென்பகுதியிலிருந்து கொண்டு வருவதிலும் படைத்தலைமை படாதபாடுபட்டது. சிங்களக் கடற்படையும்

எனவே, இம்முறை சமரின் பின்களமாக வவுனியாவை படைத்தலைமை தேர்வு செய்தது. அங்கிருந்து 'வெற்றி உறுதி'யை ஆரம்பித்தது. இதுவரை நடந்து முடிந்துள்ள நடவடிக்கையை மூன்று கட்டங்களாக வகுத்துப் பார்க்கலாம். முதலாம் கட்டம், ஓமந்தையை – நெடுங்கேணியைக் கைப்பற்றல். இரண்டாம் கட்டம், ஓமந்தையிலிருந்து ரம்பைக்குளத்தைப் பிடித்து விளக்குவைத்த குளத்திற்கு முன்னேறல். மூன்றாம் கட்டம் விளக்குவைத்த குளத்திலிருந்து பன்றிக் கெய்த குளத்தைப் பிடித்து பனிக்க நீராவி ஊடாக புளியங்குளத்தை நோக்கி முன்னேறல். இதேவேளை 'ஜெயசிக்குறு' படைநிலைகள் மீது புலிகள் இரண்டு பாரிய தாக்குதல்களையும் தொடுத்துள்ளனர். ஆகவே, இதுவரை 'ஜெயசிக்குறு'வில் என்ன நடந்துள்ளது என்பதை ஐந்து கட்டங்களாக இங்கே பார்ப்போம்.

## முதலாம் கட்டச் சண்டை

சாதாரண மரபுப் போர்த் தந்திரத்தையே 'ஜெயசிக்குறு' படைகளும் தமது நகர்வுத் தந்திரமாகப் பயன்படுத்தின. துப்பாக்கி வீச்செல்லைகளுக்கு அப்பால் இருந்தவாறு புலிகளின் நிலைகளை நோக்கி சரமாரியான குண்டுத் தாக்குதல்களைச் செய்து – நிலைகளைச் சின்னாபின்னப்படுத்திவிட்டு – கவச வாகனங்களின் துணையுடன் படையினரை அனுப்பி நிலைகளைக் கைப்பற்றுவதே அந்த நகர்வுத் தந்திரமாகும். அதேவேளை, இவ்விதம் மெதுமைப்படுத்தப்பட்ட இலக்குகளை நோக்கி சந்தடியற்ற நகர்வுகளையும் படையினர் தமக்கு வாய்ப்பான முனைகளில் பயன்படுத்த முனைந்தனர்.

13–05–97 அன்று 'ஜெயசிக்குறு' படைகள் இரு களங்களைத் திறந்தன. நொச்சிமோட்டைப் பகுதியூடாக ஓமந்தை நோக்கிய ஒரு களத்தையும், டொலர் – கென் பண்ணைப் பகுதிகளில் இருந்து நெடுங்கேணி நோக்கிய மற்றொரு களத்தையும் படையினர் திறந்தனர். முதல் நாள் சண்டை, படையினரின் எறிகணை




**களம் அசைந்த பாதை**

**படை நகர்வும் எதிர்ச் சமரும்**

விதைப்பிலேயே பெரும்பாலும் கழிந்தது. இரண்டாம் மூன்றாம் நாட்களில் சண்டைகள் தீவிரமடைந்தன. ஓமந்தை முனையில், மூன்றாம் நாள் (16-05-97)

# என்ன நடக்கிறது?

இரண்டு டாங்கிகள் அழிக்கப்பட்டன. ஓமந்தையைக் கைப்பற்ற பெரு முனைப்புடன் முன்னேறுவதும் – முடியாமல் பின்வாங்குவதுமாக சண்டை இழுபட்டது. ஓமந்தை வீழ்ச்சி காணாத நிலையிலேயே அதைக் கைப்பற்றி விட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்தது.

சண்டையின் ஒரு அத்தியாயத்தை மூன்று நான்கு நாட்களுக்குள் முடித்து ஒரு வெற்றிச் செய்தியை சிங்கள மக்களுக்கு வழங்க விரும்பிய சிங்கள அரசின் ஆசை ஈடேற, உண்மையில், இரண்டு வாரங்கள் சென்றன. ஓமந்தையையும், நெடுங்கேணியையும் கைப்பற்றிப் பலப்படுத்த நடந்த இந்த இருவாரச் சண்டையில் 125க்கும் மேற்பட்ட துருப்புக்கள் கொல்லப்பட்டிருந்தனர். 500ற்கும் மேற்பட்டோர் காயப்பட்டிருந்தனர். அத்துடன் 4 டாங்கிகள் அழிக்கப்பட்டன. மேலும் இரண்டு டாங்கிகள் சேதமாக்கப்பட்டதால், அவை, களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. "புலிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பை படையினர் சந்தித்துள்ளனர்" என பிரிகேடியர் தரத்தைக் கொண்ட ஒரு படை உயர் அதிகாரி தெரிவித்திருந்தார்.

புலிகள் ஏவிய எறிகணைகள் கொடுத்த தாக்கம்தான் இந்த சண்டைப்பரிமாண உயர்ச்சிக்குப் பிரதான காரணமாகும். முதல் முறையாக, சரமாரியான எறிகணை வெடிப்பிற்குள் நின்று புலிகளுடன் சண்டையிட வேண்டிய நெருக்கடிநிலை படையினர்க்கு எழுந்தது. இதனால், காயப்படும் படையினரின் வீதாசாரம் திடீரென உயர்ந்தது. ஒவ்வொருநாள் சண்டை முடிவிலும் நூற்றுக்கும் மேற்பட்ட படையினரைக் களத்தைவிட்டு வெளியேற்ற வேண்டிய கட்டாயநிலை படைத்தலைமைக்கு ஏற்பட்டது. இது படையினரின் வேகநகர்வைப் பெரிதும் பாதித்தது. 'ஜெயசிக்குறு'வின் மந்தமான நகர்விற்கு பிரதான காரணம் இதுவேயாகும்.

## இரண்டாம் கட்டச் சண்டை

இதுவரை காலமும் படைநடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்தது போலல்லாது, 'வெற்றி உறுதி'யை புலிகள் வித்தியாசமானமுறையில் எதிர்கொண்டனர். முல்லைத்தளம் மற்றும் புலுகுணாவி முகாம் தகர்ப்புக்களில் கைப்பற்றப்பட்ட 'ஆட்டிலறி'கள் மற்றும் மோட்டார் பீரங்கிகள் என்பன ஒரு குறித்தளவு மரபுப் போர்ப்பலத்தை புலிகள் இயக்கத்திற்குக் கொடுத்தன. இதனால் 'ஜெயசிக்குறு' சண்டைகள் வித்தியாசமான பரிமாணத்தில் நடக்கின்றன.

24–05–97 அன்று, இரண்டாம் கட்டமாக ரம்பைக்குளம் பகுதியைக் கைப்பற்றும் சண்டை உக்கிரம் பெற்றது. அன்றைய தினம் இரு டாங்கிகளும், ஒரு கவசத் துருப்புக்காவியும் அழிக்கப்பட்டன. 25க்கும் மேற்பட்ட படையினரும் பலியாகினர்.

புலிகள் ஏவும் எறிகணைகளும் – கவச எதிர்ப்பு ஆயுதங்களும் 'ஜெயசிக்குறு' படையின் போர் வலுவைப் பெரிதும் பாதித்தன. ஆள் இழப்புக்களும் – டாங்கி இழப்புகளும் தொடர்ச்சியான நகர்விற்குச் சவாலாக எழுந்தன. இதனால், நகர்வுகளைச் சில நாட்களுக்கு நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப் படைத் தலைமைக்கு எழுந்தது. இவ்விதம், சுமார் 10 நாட்கள் நகர்வுக்கான சண்டைகள் இல்லாது வெறும் எறிகணைத் தாக்குதல்களுடன் கழிந்தது. 3–06–97 அன்று மீண்டும் ஓமந்தை முனையிலிருந்து நகர்விற்கான சண்டையை படையினர் ஆரம்பித்தனர். அடுத்த ஒரு சில நாட்களில், அடுத்து இருந்த விளக்குவைத்த குளம் சந்திக்கு அண்மை வரை படையினர் நகர்ந்தனர். அங்கிருந்து, 6–6–97 அன்று பனிக்க நீராவி நோக்கி ஒரு திடீர் நகர்வை இராணுவம் செய்தது. அது புலிவீரரின் கடுமையான எதிர்ப்பிற்கு இலக்கானது. இந்தச் சண்டையில் 20 படையினர் வரை பலியாகியிருந்தனர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பெரியமடுப் பகுதியைக் கைப்பற்றிவிட்டதாக சிங்கள அரசு, பெரிய வெற்றிப் பிரச்சாரம் செய்தது.

வவுனியா – கிளிநொச்சி பாதை அமைப்பது பற்றி ரத்வத்தை இந்தக் கட்டத்தில் மீண்டும் வலியுறுத்தி அறிக்கை விடுத்தார். அடுத்ததாக, புளியங்குளத்தைக் கைப்பற்றப் போவதாக சிங்களப் படைத்தலைமை சூளுரைத்தது. புளியங்குளத்தைக் கைப்பற்றி, அதை ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடி, 'ஜெயசிக்குறு'வின் முதலாம் அத்தியாயத்தை பூர்த்தி செய்யும் ஆவலில் படைத் தலைமை இருந்தது. ஏனெனில், ஆரம்பிக்கப்பட்டபோது இருந்ததைப் போலல்லாது, 'ஜெயசிக்குறு' அலை சிங்கள தேசத்தில் தணிந்துகொண்டு சென்றதால் அதை மீண்டும் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க வேண்டிய அவசியம் அரசிற்கு எழுந்தது.

> ஆக்கிரமிக்கப்பட்ட பாதைப் பகுதி மீது புலிகள் தாக்குவர் என்பதை படையினர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தாக்குதலுக்காக புலிகள் தேர்வு செய்த இடங்களை சிங்களத் தளபதிகள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஓமந்தையையும் அதற்கு வடக்காகவும், புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்திருந்த படையினருக்கு வவுனியாவின் வாசலிலேயே அடி விழுந்தது அதிர்ச்சியூட்டும் தாக்குதலாய் அமைந்துவிட்டது.

## நொச்சிமோட்டை - தாண்டிக்குளம் தாக்குதல்

புளியங்குளம் பற்றிய இராணுவ அபிலாசைகளுடன் படைத்தலைமை இருந்தவேளை, படையினருக்கு ஒரு பேரிடி தாண்டிக்குளத்தில் விழுந்தது. 10–6–97 அன்று தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது உள்நுழைந்து தாக்கும் ஒரு அதிரடித் தாக்குதலை, புலிவீரர்கள் நிகழ்த்தினர். ஆக்கிரமிக்கப்பட்ட பாதைப் பகுதி மீது புலிகள் தாக்குவர் என்பதை படையினர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தாக்குதலுக்காக புலிகள் தேர்வு செய்த இடங்களை சிங்களத் தளபதிகள்



எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஓமந்தையையும் அதற்கு வடக்காகவும், புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்திருந்த படையினருக்கு வவுனியாவின் வாசலிலேயே அடி விழுந்தது அதிர்ச்சியூட்டும் தாக்குதலாய் அமைந்துவிட்டது.

'ஜெயசிக்குறு' படையின் கட்டளைத் தலைமையகம் தாண்டிக்குளத்திலேயே அமைந்திருந்தது. சண்டைகளுக்குத் தேவையான வெடிப் பொருட்களும் – மருத்துவச் சாமான்களும் இந்தப் பகுதியிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இந்தவகையில், 'ஜெயசிக்குறு'வின் நெஞ்சுப்பகுதியாக, அப்போது, தாண்டிக்குளம் விளங்கியது. நெஞ்சுக்கூட்டின் மீது, பாதையின் இருபுறமும் இருந்து ஊடறுத்து உள்நுழைந்த புலிகள் அதிர்ச்சித் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர். இப்பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 'ஆட்டிலறி' எறிகணைகள் – மோட்டார் எறிகணைகள் – டாங்கி எறிகணைகள் என்பன 'ஜெயசிக்குறு' பூதத்தின் பிரதான உணவுகளாக இருந்தன. பூதத்தை பட்டினி போட்டு அதன் இயக்கத்தை மந்தப்படுத்தும் தந்திரத்தைப் புலிகள் கடைப்பிடித்தனர். இந்தத் தாக்குதலில் பல்லாயிரம் எறிகணைகளும், பல நூறு டாங்கி எறிகணைகளும் தீயில் அழிந்தன. பல இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன. சில கைப்பற்றப்பட்டன.

> *பண்டைய கிரேக்கத்தின் முதல் மரதனோட்ட வீரனான அந்தத் தூதன், தனது இலக்கை அடைந்து – சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். 'ஜெயசிக்குறு' மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப் போகின்றதா? அல்லது இடைநடுவிலே காணாமல் போகப் போகின்றதா?*

இதேசமயம், குறைந்தது 400 படையினர் கொல்லப்பட்டு, 570க்கும் அதிகமானோர் காயம் அடைந்திருந்தனர். தாக்குதல் வலயத்திற்குள் சிக்குப்பட்ட படையினருக்கு உதவ உலங்கு வானூர்திகளில் வந்திறங்க சிங்கள விசேட பயிற்சிப் படைகள் முயன்றன. இந்த முயற்சியில் ஒரு 'எம்.ஐ.24' உலங்கு வானூர்தி கடும் சேதத்திற்கு உள்ளானது. ஓமந்தைப் பகுதிகளில் இருந்து உதவிக்கென நொச்சிமோட்டைப் பகுதிக்குள் நுழைய முயன்ற படையினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் இரண்டு டாங்கிகள் அழிக்கப்பட்டன. குறைந்தது 24 மணி நேரமாக தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

'ஜெயசிக்குறு' படைக்கு விழுந்த முதலாவது மரண அடியாக தாண்டிக்குளம் தாக்குதல் அமைந்துவிட்டது. "புலிகள் காடுகளுக்குள் ஓடிக்கொண்டிருக்கின்றனர்" என்ற பிரச்சாரத்தின் மத்தியில், தப்பிப் பிழைத்த தாண்டிக்குளம் படையினர் சிலர் தங்களை உருமாற்றி – பொதுமக்களின் உடையணிந்து – வவுனியாவுக்குள் ஓடினர் என்று செய்திகள் வெளிவந்தன. இப்பெரும் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் மூன்று கரும்புலிகள் உட்பட 85 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## மூன்றாம் கட்டச் சண்டை

தாண்டிக்குளம் தாக்குதல் 'ஜெயசிக்குறு' படையை, சுமார் இரண்டு வாரமாக நின்ற இடத்திலேயே முடக்கி வைத்தது. அழிக்கப்பட்ட வெடிப்பொருள் வளங்களை மீளப்பெறவும், கொல்லப்பட்ட – காயப்பட்ட படையினருக்காக புதியவர்களை வரவழைக்கவும், தாக்குதலுக்குள்ளான பகுதிகளைப் பலப்படுத்தவும் இந்த இரண்டு வாரங்களைப் படையினர் பயன்படுத்தினர்.

புளியங்குளத்தை விரைவாகக் கைப்பற்றி 'தாண்டிக்குள' பரபரப்பைத் தணிக்க படையினர் விரும்பினர். புளியங்குளத்திலிருந்து ஒரு சில கி. மீற்றர் தூரத்திலேயே படையினர் நிலை கொண்டுள்ளதால் ஒரு சில நாள் சண்டையுடன் புளியங்குளத்தை பிடித்து விடலாம் என்று படைத்தளபதிகள் எதிர்பார்த்தனர். இந்த நிலையில், அவசரம் அவசரமாக, படையினர் மூன்றாம் கட்டச்

தொடர்ச்சி மறு பக்கம் ....

# "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை: என்ன நடக்கிறது?

*புலிகளின் கதை முடிகின்றது என நினைத்துக் கொண்டு 'வெற்றி உறுதி' என நடவடிக்கைக்கு சிங்கள அரசு பெயர் சூட்டியது. ஆனால், 'செக்மேற்'றின் விதி எப்படி முடிந்தது. 'செக்மேற்' சொன்னவர்களே 'செக்மேற்'றுக்கு ஆளாக்கப்பட்ட தலைகீழ் நிகழ்ச்சிதான் நடந்திருந்தது. அதேபோன்றதொரு பேராசைப் பெயர் சூட்டலுடன் அதீத எதிர்பார்ப்புக்களுடனும் சிங்கள அரசு புறப்பட்டுள்ளது.*

சண்டையை ஆரம்பித்தனர். 22-06-97 அன்று பனிக்க நீராவிப் பகுதியில்



இருந்து நகர்வை ஆரம்பிக்க முயன்றனர். இந்தப் படைமுயற்சியைப் புலிகளின் பெண்கள் படையணி எதிர்கொண்டது. சண்டையில் டாங்கி ஒன்றைப் பெண் புலிகள் தகர்த்தழித்தனர். மேலும், இரு டாங்கிகளைக் கடுமையாகச் சேதமாக்கினர். இதில், 15 படையினர் வரை பலியாகினர். இரண்டு நாட்கள் மட்டுமே நடந்த மூன்றாம் கட்டச் சண்டையை புலிகளின் இன்னொரு பாரிய தாக்குதல் இடைநிறுத்தியது.

## பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவித் தாக்குதல்

தாண்டிக்குளத்தில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு சரியாக 14 நாட்களின் பின், கிட்டத்தட்ட அதே தாக்குதற் பரிமாணத்துடன் முன்னணிப் பகுதி மீது புலிகள் தாக்கினர். படையினரின் பீரங்கிப் படைப்பிரிவு அமைந்திருந்த பகுதி தாக்குதலின் பிரதான இலக்காகியது. இரவு முழுவதும் நடந்த தீவிரமான சண்டையின் விளைவாக ஒரு 120 மி.மீ பீரங்கியை புலிகள் கைப்பற்றினர். அத்துடன், நான்கு பீரங்கி அடிப்பாகங்களையும், சிலநூறு எறிகணைகளையும் புலிகள் கைப்பற்றினர். சுமார் 185 படையினர் பலியாகினர். 200 பேர் வரையில் படுகாயமடைந்தனர். புலிகள் தரப்பில் 90 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

'ஜெயசிக்குறு'வை ஆரம்பித்துவிட்டு வெற்றி எக்காளப் பிரச்சாரம் செய்த அரசிற்கு சண்டைகளில் ஏற்பட்ட திருப்புமுனைகளும், மந்த நகர்வுகளும் பெரிய தலைமிடியைக் கொடுத்தன. வீதி அமைப்பு முயற்சியில் காற்பங்கைக் கூட எட்டாத நிலையில் 'ஜெயசிக்குறு'வின் ஆள் - ஆயுத பலங்களில் கணிசமான பகுதியை அது இழந்துவிட்டது. 'ஜெயசிக்குறு'வுக்காக சண்டை அனுபவம் வாய்ந்த சிப்பாய்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அத்தகைய முதன்மைப் படைவீரரின் இழப்பு என்பது - சிங்களப் படையை உள்ளிருந்து அரிக்கும் புற்றுநோய் போல, சிங்களத்தின் படைவல்லமையை அரித்தெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அபாயங்களுக்குள் புகுந்து விளையாடுபவர்கள்தான் போரில் அற்புத சாதனைகளைப் படைப்பர். ஆப்கானிஸ்தானின் கல்மலைகளையும், அரேபியாவின் மணல் வனங்களையும் நடந்து கடக்க அலெக்சாண்டர் தயங்கித் திரும்பியிருந்தால், "மாவீரன்" என்ற கதாநாயகப் பாத்திரத்தை வரலாற்றுக் கடவுள் அவருக்கு வழங்கியிருக்கமாட்டார். வான் வழியாக பல்லாயிரம் மைல் பயணம் செய்து 'எண்டபே' விமான நிலையத்தில் இறங்கி பணயம் வைக்கப்பட்டிருந்த தனது குடிமக்களை மீட்க இஸ்ரேல் தளபதிகள் வரைந்த திட்டம் ஒருவகையில் அழகான திரைப்படக் கற்பனை. ஆனால், அதை வாய்க்கெட்டிய பொருளாக இஸ்ரேலிய வீரர்கள் சாதித்துக் காட்டினர். மாறாக, இடிஅமினின் வீரர்கள் இஸ்ரேலுக்குள் புகுந்திருந்தால் அவர்களின் எலும்புகள் கூட உகண்டாவுக்குத் திரும்பியிருக்காது. போர் அற்புதங்களை யார் நிகழ்த்தத் துணிகின்றார்கள், யாருக்கு எதிராக அதைச் சாதிக்க முயல்கின்றார்கள் என்பது மிகமிக முக்கியம்.


இலங்கைத் தீவின் களநிலவரத்தின்படி, வன்னியின் புவியியல் மையத்தைக் கோடு போட்டதுபோல ஊடறுத்துச் செல்ல விரும்பும் 'ஜெயசிக்குறு' முயற்சி கற்பனையா!? அற்புதமா!?

மரபுப்போர் வளங்களைப் பெறுவதில் இருபகுதிப் படைகளுக்கும் சம வாய்ப்புகள் இருக்குமானால் 'ஜெயசிக்குறு' முயற்சி 65 கி.மீற்றர் நீளக் கற்பனையாகவே இருக்கும். எனினும், 'சிங்களத்தின் அரச படைகள்' என்ற ரீதியில் சிங்கள இராணுவத்திற்கிருக்கின்ற படைபல அனுகூலங்கள், இச்சாதனையை நிகழ்த்த சிங்களத் தளபதிகளைத் தூண்டியுள்ளன.

படைக்கு சிக்கலாகிவிட்டது. அதே வேளை, நிலைகொண்ட படையினர் மீதான தாக்குதலில், படைத்தரப்புச் சந்திக்கும் இழப்புகள் இவ்வளவு உயர்பரிமாணத்தில் இருக்கும் என்று சிங்கள அரசு எதிர்பார்க்கவில்லை.

எதிர்பாராத இடங்களிலும், எதிர்பாராத நேரங்களிலும் படையினர் தாக்கப்படுகின்றனர். தாண்டிக்குளம் தாக்குதல் எதிர்பாராத இடம். பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவித் தாக்குதல் எதிர்பாராத நேரம். படைத்தரப்புக்கு ஆச்சரியமூட்டி - அதிர்ச்சிக்குள்ளாக்கி - அவர்களுக்கு பேரிழப்புக்களை வழங்குவது தலைவர் பிரபாகரனின் ஒரு போர் உபாயம்.

**60 நாட்களுக்கும் மேற்பட்ட 'ஜெய சிக்குறு' சண்டையில் இதுவரை படைத்தரப்பு சந்தித்த ஆள் - ஆயுத இழப்பு என்பன, சாதாரண தொகையில் அமைந்**




**தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை: புலிகளின் தாக்குதல் வலயம்**

'ஜெயசிக்குறு' படைகள் இருவகையான சவால்களை புலிகளிடம் இருந்து எதிர்நோக்குகின்றனர். ஒன்று, நகர்விற்கான சண்டை. இரண்டு, நிலைகொண்ட படை மீது புலிகள் நடாத்தும் பெரும் தாக்குதல்கள். சுமூகமாக நடைபெறும் என்று எதிர்பார்த்த நகர்வுச் சண்டையே

**திருக்கவில்லை. இதேபோல், 'ஜெயசிக்குறு' படைகள், மேலும் இழப்புகளையும் அழிவுகளையும் சந்திக்கும் என்பது திண்ணம்.**

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# முல்லை மாவட்டப் பொறுப்பாளர் கப்டன் தினேஷ்

தந்தையாரின் தேசப்பற்றும், அரசியல் ஈடுபாடும் இளவயதினிலேயே இவன் நெஞ்சத்தில் ஊறிவிட்டது. அதனால்தான் பாடசாலைப் பருவத்திலேயே இவன் போராட்டப் பங்களிப்பில் கலந்தான். அரச அடக்குமுறைகளுக்கு எதிராக மாணவர் போராட்டங்களில் கலந்து மாணவர்களை விடுதலைப் போராட்டத்திற்கு ஒன்றிணைத்தான்.

உயர்தர வகுப்பு மாணவனான தினேஷ், இறுதிப் பரீட்சையை எழுதவில்லை. அது அவனுக்கு அவசியமாகவும் படவில்லை. தன்னின மக்கள் துன்பப் புதைகுழிக்குள் வீழ்ந்து கிடக்கையில், கைகள் கட்டி வேடிக்கை பார்ப்பதற்கு அவன் தயாராக இல்லை. தனது மண்ணை மீட்பதற்காகவும் மக்களின் அடிமைநிலையை மாற்றுவதற்காகவும் உண்மைப் போராளிகளுடன் இணைந்து கொண்டான்.

புலிகளுடன் இணைந்து பயிற்சிக்கு முதலே, பொதுவான சில வேலைகளில் ஈடுபட்டான். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புதிய போராளிகளை அணிதிரட்டிய தினேஷ், அவர்களுடனேயே பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்தான். பயிற்சிகளில் இவனது ஈடுபாடும், உறுதியும் இவனது தனித் தன்மையைக் காட்டியது. இவனிடம் இயல்பாகவே இருந்த திறமையின் நிமித்தம், அரசியல் வகுப்புக்களின் பின்பு அரசியல் வேலை செய்வதற்காக, அக்கராயன், வன்னேரிக்குளம், சோணாவில் பகுதிகளில் நியமிக்கப்பட்டான்.

**(த. தமிழ்ச்செல்வன் 12-8-89)**

பின்பு,

அவசியத் தேவையின் நிமித்தம், தினேஷ் நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு மாற்றப் பட்டான். இங்கு ஆனந்தப்புளியங்குளம், குளவிசுட்டான், சன்னாசிப்பரந்தன், அடம்பன் பகுதிகளிற்கு அரசியற் பிரிவு வேலைகளுக்காக நியமிக்கப்பட்டான்.

மக்களின் பிரச்சனைகளில் தெளிவான சிந்தனையுடைய இவன் வறுமைப்பட்ட மக்களின் சிக்கலான வாழ்வு முறையை விளங்கிக்கொண்டு அவர்களுடன் ஒன்றாகக் கலந்து கொண்டான். சிக்கலான போராட்ட காலங்களின் போது நிர்வாகச் சீர்கேடு காரணமாக, மக்களின் வாழ்வு, சமூகச் சிதைவுகளில் சிக்குண்டு, சீரழியாது காக்கவேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அம்மக்களை கட்டுப் பாடான, ஒழுங்கான வாழ்வு முறைக்கு வழிகாட்டி, அவர்களது அடிமை வாழ்வு முறையை உணர்த்தி; அவர்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். வன்னியில், மக்களிடையே தெளிவான நிலையை ஏற்படுத்தி, புலிகளின் மக்கள் பலத்திற்கு முறையான அடித் தளத்தை அமைத்ததில், தினேஷின் பங்களிப்பும் நிறைந்துள்ளது. தினேஷினது திறமையின் பிரதிபலிப்பாக....

ஒட்டிசுட்டான் பிரதேசத்தின் அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இராணுவ நெருக்குதல் மிகவும் அதிகமான இப்பிரதேசம், போராளிகளின் வாழ்வு முறைக்கு சிறிதும் ஒத்துவரவில்லை. இராணுவத் தினரதும், துரோகிகளினதும் அதிகரித்த நடமாட்டங்கள் காரணமாக, பொதுமக்கள் கூட போராளிகளுக்கு ஒத்துழைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அங்கு கடமை புரியச் சென்ற தினேஷ், மக்கள் ஆதரவுதான் எம்மை அங்கு நிலைபெறச் செய்யும் என்பதை உணர்ந்து கொண்டான். அதனால் தான் தொடர்ந்த ஆபத்துக்களிற்கிடையிலும் அவனால் அங்கு தொடர்ந்து நிற்கக் கூடியதாக இருந்தது. ஒட்டிசுட்டான் பகுதியில் ஆரம்பத்தில் எமக்கு சிக்கலாகவே இருந்தது. காலப்போக்கில் தினேஷினது கடுமையான உழைப்பின் விளைவாக பெரும்பாலான மக்களின் நிறைந்த ஆதரவும், பங்களிப்பும் எமக்குக் கிடைத்தன. இதற்கு இப்பகுதியில் புலிகளின் மக்கள் பலத்தை அங்கு எமக்கு ஆதரவாக நடைபெற்ற ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொண்ட மக்களின் பெருந்தொகைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

தினேஷ், வறுமைப்பட்ட எமது மக்களின் நல்வாழ்விலும், சமூக ஆதிக்கம் நிறைந்தவர்களின் அடக்குமுறை வடிவங்களிலிருந்து அவர்களைக் காப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். இழப்பதற்கு எதுவுமற்ற வறிய மக்களே எத்தகைய நிலையிலும் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்ற கருத்தை உடையவன் அவன். ஏற்றத்தாழ்வுகள் உள்ள கொடிய சமூக அமைப்பு முறையை மாற்றி சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் நாட்டம் உள்ளவன் தினேஷ். மக்களையும், இயற்கையையும் சமூக விரோதிகளிடமிருந்து காப்பதற்காக இரவு பகலாக விழிப்புடன் செயற்படவும் வேண்டி இருந்தது. கசிப்பு வடிப்பவர்களிடமிருந்தும், கொள்ளையர்களிடமிருந்தும் மக்களைக் காப்பாற்றிய அதேவேளை, கள்ள மரம் அறுப்பவர்களிடமிருந்து இயற்கையையும் காப்பாற்ற வேண்டி இருந்தது. எம்மக்களின் போராட்ட உணர்வைத் திசை திருப்புவதற்கெனவும், இளைஞர்களைத் தவறான திசையில் கொண்டு செல்வதற்குமென, விரோதிகளால் பரப்பப்பட்ட தவறான திரைப்படங்கள், புத்தகங்களைத் தடை செய்து சமூகத்தைக் காப்பாற்றவும் வேண்டி இருந்தது. விடுதலைப் போராட்டம், எங்கள் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்ததுதான். ஆனால் நாம் வீரம் மிக்க கலாச்சாரச் சீரழிவற்ற பண்பான சமூகம் ஒன்றை உருவாக்க் கடுமையாக உழைத்தோம்.

ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் கப்டன் தினேஷினால், எம்மக்களின் கட்டுப்பாடான வாழ்க்கை முறைக்கும், சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கும், விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பதற்குமாக பல மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது. இணக்க சபைகள் என்ற கிராம நீதிமன்றங்களையும், அத்தியாவசிய சேவைகள்குழு என்ற சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான குழுக்களையும், மகளிர், அன்னையர் முன்னணிகளையும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புக்களையும் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தினான். இவை அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்மையான பங்களிபைச் செய்தன. அதேவேளை பொதுமக்களின் சமூக வாழ்வையும் சீரிய முறையில் கொண்டுசென்றன.

ஒட்டிசுட்டான் பிரதேசத்தில், அப்பகுதி மக்களிடையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிலைப்படுத்தி அவர்களின் நெஞ்சங்களில் இவன் இடம் பிடித்ததால்தான் இந்தியரின் ஐந்து படை முகாம்களுக்கு நடுவிலும் இவனால் வாழ முடிந்தது. திறமையுடன் செயற்பட முடிந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பூரணமான தெளிவும் அரசியல் வேலையில் திறனும் இருந்தும் தினேஷ் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்கவும், தாக்குதற் குழுவில் இருக்கவுமே விரும்பினான். என்றாலும் இயக்கம் இட்ட பணியை திறமையுடனும் உறுதியுடனும் செய்து வந்தான்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை மிகவும் வெறுத்தான். அவர்கள் உதவி செய்வதற்கு வரவில்லை என்பது அவனுக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் இந்தியப் படையினரின் கொடுமையான நடவடிக்கைகளும், கேவலமான செயல்களும் அவர்கள் மீதான வெறுப்பை மேலும் அதிகரித்தது. எழுச்சி அடைந்த மக்களை அடக்கி, அழித்து விடலாம் என நினைக்கும் இந்திய அரசுக்கு இங்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்ற உறுதி உடையவன், மக்களால் சமூகத்தின் விரோதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட ஈ.பி. ஆர். எல். எப். ஐப்பற்றியோ ஏனையவர்களைப் பற்றியோ அவன் எண்ணவில்லை. ஏனெனில் இந்தியப் படையினருக்கு முதலே அவர்கள் இந்தியாவிற்குச் சென்றுவிடுவார்கள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

தினேஷ் எப்பொழுதுமே பிரச்சனைகளும், சிக்கல்களும் நிரம்பிய பகுதிகளிலேயே வேலை செய்வதற்கு விரும்பினான். ஒருவராலும் முடியாததை தான் செய்ய வேண்டும் என்றும் விரும்பினான். தனது போராட்ட வாழ்வின் ஒரு பகுதியை



ஒட்டிசுட்டான் பிரதேசத்திலேயே கழித்து அங்கு போராட்டத்திற்குச் சாதகமான பல மக்கள் அமைப்புக்களை ஏற்படுத்தியதோடு, அங்கு நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குபற்றினான். அதே நேரம் இயக்கத்திற்கென பல புதிய போராளிகளையும் இணைத்துக் கொண்டான்.

அதன் பின்பு சில காலம் புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியற் பொறுப்பாளராகக் கடமையாற்றிய தினேஷ் பின்பு முல்லைத்தீவு மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அவனுக்கு, இந்தியப் படையினரின் கடுமையான நடவடிக்கைகளிற்குள்ளும், மக்களிடையே இயக்கத்தைப் பலப்படுத்தி, வளர்த்தெடுப்பதில் சிரமம் இருக்கவில்லை. ஏனெனில் மக்கள் உண்மையை உணர்ந்திருந்தனர். தம்மீதான எல்லா அடக்குமுறைகளையும் உணர்ந்திருந்தனர். அடிமைகளாக வாழ்வது இல்லை என்று அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

தினேஷ் தனது நற்குணங்கள் மூலம் அனைவரையும் கவர்ந்திருந்தான். அவனது அமைதியான சுபாவம், விவேகமான நடவடிக்கைகள், நன்றாகவே பழகும் தன்மை ஆகியவற்றால், அவனிடத்தில் அவன் பழகிய மக்களும், சக போராளிகளும் நிறைந்த அன்பையும் மதிப்பையும் வைத்திருந்தனர்.

*12–8–1989 அன்று,*

பழம்பாசியை அண்டிய காட்டுப்பகுதிக்குள் எம்மவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் வழமையான அவதானத்துடன், எத்தகைய நிலைமையையும் சமாளிக்கக்கூடியவாறு சென்றுகொண்டிருந்தனர். தினேஷ் தனது இடுப்பிலிருந்த பிஸ்டலை சரி செய்துகொண்டான். திடீரென எடுக்கக்கூடியவாறு இருக்கிறதென்பதை உறுதிப்படுத்திக்கொண்டான். அக் காட்டிற்குள் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் எம்மவர்கள் சிலரைச் சந்திக்கவேண்டும். அந்த அடர்ந்த சோலையான காடு நிசப்தத்தில் மூழ்கி இருந்தது. ஆனால் இவர்களின் வரவை எதிர்பார்த்து இந்தியரின் புகழ்பெற்ற அணித்துருப்பினர்கள் காத்திருப்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

எம்மவர்களில் முன்னே சென்றவன் கூறினான். இராணுவத்தினரின் சப்பாத்துக் காலடிகள் உள்ளன என்று. காலடிகளைப் பார்த்துவிட்டு இந்தத் திசையில்தான் போயிருக்கிறாங்கள் என தினேஷ் கையைக் காட்டினான். அவர்களுடன் இருந்த அவர்களது பொறுப்பாளர், இராணுவத்தினர் முன்னால்தான் படுத்திருப்பார்கள், முறையான ஒரு அடி கொடுப்போம் என்றார். போராளிகளில் ஒருவன் 'ஆமி' என்று உசார் படுத்தினான். படையினரைக் கண்டவுடன் இரண்டு பக்கங்களிலும் நெருங்கி எம்மவர்கள் தாக்குதல் நடாத்தினர். வீராவேசமாக தாக்கிக் கொண்டே எம்மவர்கள் முன்னேறினார்கள். அவ்விடத்திலிருந்த இந்தியப் படையினரில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான். ஏனைய ஆறு பேர் கொல்லப்பட்டிருந்தனர். அதேநேரம் ஆங்காங்கே மறைந்திருந்த இராணுவத்தினர் சுட்டுக் கொண்டே பரவலாக முன்னேறினர். அவர்களை நோக்கி எம்மவர்களின் துப்பாக்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன. கொல்லப்பட்ட இராணுவ வீரன் ஒருவனது எஸ். எல். ஆர். துப்பாக்கியைக் கைப்பற்றி அதனாலேயே எதிரிகளைத் தாக்கத் தொடங்கினான் தினேஷ். நீண்ட நேர யுத்தம் அவனது துப்பாக்கியின் தோட்டாக்களைக் காலியாக்கின. தனது தோழர்களை நோக்கி பின்வாங்கத் திரும்பினான். அதே நேரம், அவனது நெஞ்சினை இந்தியப் படையினரின் துப்பாக்கிகளின் ரவை ஒன்று துளைத்துச் சென்றது. அத்தாக்குதல் தொடர்ந்தது. பராதுருப்பினரில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

எம்மவர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அவசரமாக அமைக்கப்பட்ட 'ஸ்ரெச்சரில்' தினேஷ் தூக்கி வரப்பட்டான். இராணுவத்தினரின் சப்பாத்துத் தடங்கள் பரவலாகத் தென்பட்டன. பெரிய அளவில் பரவலாக இறங்கி உள்ளனர். எதிரியை எங்கும் திடீரென சந்திக்கலாம். நான் போகப்போகிறேன்! இறக்குங்கள் இறக்குங்கள் என்றான், தினேஷ். கீழே இறக்கியவுடன் அவனது கண்கள் தனது தோழர்களை ஆவலோடு பார்த்தன. ஆனால், அவை சோர்ந்து போகத் தொடங்கின. அவன் கையை உயர்த்தி ஆதரவைத் தேடினான். தோழன் ஒருவனின் கைகளை இறுக்கப் பற்றினான்.

"கப்டன்' தினேஷ் வீரமரணம் அடைந்துவிட்டான்"

மறுநாள்.....

கப்டன் தினேஷினுடைய உடல் இராணுவச் சீருடையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவனது உடலைச் சுற்றி பூரண சீருடையில் எம்மவர்கள் அணிவகுத்திருந்தனர். தோழன் ஒருவன் பேசினான். "சுதந்திர சமதர்ம தமிழீழம் என்னும் புனிதமான இலட்சியத்திற்காக, கப்டன் தினேஷ் வீரமரணத்தை தழுவிக் கொண்டார். அவரது பாதையை நாம் உறுதியுடன் தொடர்வோம். அவருடைய இலட்சியத்தை நாம் நிறைவேற்றுவோம்." தோளர்கள் உறுதி எடுத்துக் கொண்டார்கள். உயர்ந்த அவர்களின் கைகளில், அன்று கைப்பற்றிய ஆயுதங்கள், வானத்தைப் பார்த்தன. இனி அவை எங்கள் மண்ணை மீட்பதற்காக போரிடும்.

# இன்றைய எனது வாக்கு மூலம் என்னவென்றால், பயங்கரவாதத்திற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லை என்பதாகும்!

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச் சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை மார்ச் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. கனடா இணைப்பு நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கில் சுரேஷ் அவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

1) திரு. சுரேஷ் அவர்கள் பயங்கரவாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது. அந்த இயக்கம் பயங்கரவாதத்தில் ஈடுபடக்கூடும் என நியாயமான முறையில் நம்பப்படுகிறது.

2) திரு. சுரேஷ் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

3) திரு. சுரேஷ் பயங்கரவ ாத இயக்கம் ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் அல்லது இருந்தார் என நம்புவதற்கு நியாயமான அடிப்படைகள் இருக்கின்றன.

இங்கே குறிப்பிடப்படும் பயங்கரவாத இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளாகும்.

இதுவரை நடந்த விசாரணையில் கனேடிய அரசு பின்வரும் குற்றச்சாட்டுகளை வற்புறுத்துவதில்லை எனக் கைவிட்டுள்ளது.

திரு. சுரேஷ் அவர்கள்,

அ) கடும் குற்றச்சாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஆ) சிறிலங்காவில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இ) கனடாவில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் அல்லது இராணுவ உபயோகத்துக்கான பொருட்கள் கொள்வனவு செய்தார்.

இவ்வழக்கு விசாரணையை நீதிபதி Teitelbaum நடாத்துகிறார். இவ் வழக்கு விசாரணையில் கொடுக்கப்பட்ட சாட்சியங்கள் முற்றுப் பெற்றுள்ளது. இதுவரை திரு.சுரேஸ் சார்பாக நாற்பதிற்கும் மேற்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் அவரின் வழக்கறிஞர்கள் Ms.Barbara Jackman, Lorne Waldman ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இரு தரப்பு வழக்கறிஞர்களின் தொகுப்புரை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மார்ச்சு மாதம் 20ம் நாள் நடந்த விசாரணையின் போது சர்வதேச சட்ட நிபுணரும், ஐடடமைைளை பல்கலைக்கழக சட்டப் பேராசிரியருமான பிரான்சிஸ் பொயில் (Prof. Francis Boyle)சாட்சியம் அளித்தார். அவரது சாட்சியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இத்தோடு முற்றுப் பெறுகிறது.

கேள்வி: அதில் கையொப்பம் இட்டபடியால் அதில் சொல்லப்பட்ட கோட்பாடுகளை ஒத்துகொண்டிருக்கிறீர்கள்?

பதில்: மொத்தத்தில் ஆம் நிச்சயமாக.

கேள்வி: ஒரு புலமையாளன் என்ற முறையில் முரண்பாடு இல்லாது இருப்பதற்கு அந்தக் கோறபாடுகளை ஆதரிப்பதற்கு பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம் உங்களிடம் இருப்பது அவசியமா?

பதில்: இல்லை, இந்தப் பிரகடனத்தில் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம் இல்லை. காரணம் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம் செய்யமுடியாது என்பது இந்த மாநாட்டில் கலந்து கொண்ட எல்லோருக்கும் தெரியும். ஆனால் அப்பாவிப் பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் பிரச்சனையை இட்டு நாங்கள் விவாதிக்க விரும்பினோம். மீண்டும் நிபுணர்கள் என்றமுறையில் பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் காண ம்ுடியவில்லை. பேராசிரியர் ஞரபைடநல இதுபற்றிச் சொல்லியதை இன்று காலை கேட்டீர்கள்.

கேள்வி: இப்போது கனம் நீதியரசர் கேட்ட பயங்கரவாதத்தின் உருவம் பற்றிய கேள்விகள் சம்பந்தமாக இறுதிக்கேள்வி. உங்களிடம் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம் இல்லை. கனம் நீதியரசர் கேட்ட கேள்விகள் சம்பந்தமாக இரண்டு விடையங்களை தெளிவுபடுத்துமாறு உங்களிடம் கேட்கப்போகிறேன்.

முதலாவது கேள்வி, உங்களுக்கு பயங்கரவாதம் பற்றிய விளக்கம் இல்லையா? அல்லது பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் நடைமுறைச்சாத்தியமான வரைவிலக்கணம் இல்லையா?

பதில்: இன்றைய எனது வாக்குமூலம் என்னவென்றால் பயங்கரவாதத்திற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லையென்பதாகும்.

கேள்வி: சரி, கனம் நீதிபதி அவர்கள் உங்களுக்குத் தெரியாது என்று கேள்விகள் கேட்டபோது

பதில்: அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படுவதை பற்றிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நிறைய எழுதியிருக்கிறேன். அது சம்பந்தமாக தனிப்பட்ட முறையிலும் தெரிந்துகொண்டிருக்கின்றேன். நான் முன்னர் கூறியவாறு ஜெனிவா மரபுகளையும் ஒப்பந்தங்களையும் அங்கீகரிக்குமாறு நான்தான் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை ஊக்குவித்தவன். அதற்கான காரணம் என்னவெனில் இஸ்ரேலியப் பொதுமக்கள் பெண்கள், குழந்தைகள், வேறு யாரேனும் தாக்குதலுக்கு உட்படுத்தக்கூடாது என்பதற்காக. ஆனபடியால் இந்த விடயம் எனக்கு வெறுமனவே படிக்கவேண்டும் என்பதற்காக செய்யப்படும் காரியமல்ல. வெறுமனே நான் கட்டுரைகள் வரைவதில்லை நான் இந்த விடயங்களை தொழில் ரீதியாக கையாள் பவன்.

கேள்வி: இறுதியாக, பயங்கரவாதம் பற்றிய ஐக்கியநாடுகள் சபைக்கு வரைவிலக்கணம் இல்லை. அதற்காக, ஐக்கியநாடுகள் சபை தனது பிரகடனங்களிலும், தீர்மானங்களிலும் பயங்கரவாதம் என்ற சொல்லை உபயோகியாது விடுவதில்லை.

பதில்: வரைவிலக்கணம் இல்லாதபோது ஐ.நா.சபை அதனை எப்போதும் உபயோகித்துக்கொண்டுதான் இருக்கிறது. அவர்கள் எப்போதும் பிரச்சனைகளை, அடிப்படைப் பிரச்சனைகளையிட்டு விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவழி, எனது முதற் புத்தகத்தில் குறிப்பிட்டது போல, விமானக் கடத்தலுக்கு எதிராக ஒரு மரபை ஏற்படுத்திக்கொள்வோம், பணயக்கைதிகளுக்கு எதிராக ஒருமரபை ஏற்படுத்திக்கொள்வோம் அல்லது வேறுவிடயமாக.

ஆகவே சட்ட வல்லுனர்கள் என்றமுறையில் பிரச்சனைகளை நடைமுறைச் சாத்தியமான முறையில் கையாள்கின்றோம்.

செல்வி யக்மன்: இவைதான் எனது கேள்விகளாகும்.

நீதியரசரால் மீள் விசாரணை:

கேள்வி: இன்னும் ஒரு கேள்வி மட்டும் இருக்கிறது. பயங்கரவாதம் பற்றிப் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் இல்லை என்பது எனக்கு விளங்குகிறது. சட்டத்தரணி உங்களிடம் பயங்கரவாதம் பற்றிய கருத்து விளங்குகிறதா என்று உங்களிடம் கேள்வி கேட்டார். அதற்கு நீங்கள் மறுமொழி இறுத்தீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. பயங்கரவாதம் பற்றிய எண்ணம் உங்களுக்கு விளங்குகிறதா?

பதில்: அமெரிக்கா, உருசியா, இனஒதுக்கல் நாடான தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் வெவ்வேறு குழுக்கள், இயக்கங்கள் இவற்றுக்கு பயங்கரவாத முத்திரையை குத்தியிருக்கின்றன. அவை சட்டரீதியில் அல்லாது பக்கசார்பான அரசியல் காரணங்களுக்காக அப்படி நடந்து கொண்டுள்ளன.

இதற்கான அத்தாட்சி என்னவெனில், இன்றுவரை அமெரிக்காவில் பயங்கரவாதக் குற்றம் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகக் கருதப்படுவதில்லை. சட்ட சம்பிரதாயத்தை ஈடுசெய்யக்கூடிய வரைவிலக்கணத்தை அவர்களால் இன்னும் வரைய முடியவில்லை.

கேள்வி: இந்த இடத்தில் இடைநிறுத்த விரும்புகிறேன். நான் அனுமானிப்பது என்னவென்றால் பயங்கரவாதம் பற்றிய எமது வரைவிலக்கணம் மற்றவர்கள் சொல்லித் தெரிந்து கொண்டது. தனிப்பட்ட முறையில் உங்களுக்குப் பயங்கரவாதம் என்றசொல் பற்றிய கருத்து இல்லை?

பதில்: அப்படியான ஒன்றை என்னால் உருவாக்க முடியவில்லை.

கேள்வி: உங்களுக்கு பயங்கரவாதம் என்ற சொல் பற்றிய கருத்து இல்லை?

பதில்: என்னிடம் வரைவிலக்கணம் இல்லை.

கேள்வி: நான் பயங்கரவாதம் என்ற சொல்பற்றிய வரைவிலக்கணத்தைப் பற்றிக் கேட்கவில்லை. பயங்கரவாதம் என்ற சொல் பற்றிய கருத்து உண்டா?

செல்வி யக்மன்: கனம் நீதிபதி அவர்களே, நீங்கள் அவரை ஒரு முதலாம் வகுப்பு மாணவன் என நினைக்க வைக்கிறீர்கள்!

நீதியரசர்: அப்படியில்லை. மன்னிக்கவும். எனக்கு மறுமொழி வேண்டும். நீங்கள் கேள்வி கேட்டீர்கள். அதற்கான மறுமொழியை நான் இன்னும் அறியவில்லை.

செல்வி யக்மன்: இது மொழி இலக்கணம் பற்றிய வேறுபாடாக இருக்கலாம். வரைவிலக்கணம் இல்லாத கருத்துக்களை புரிந்து கொள்ளலாம்.

நீதிமன்றத்தால் விசாரணை:

கேள்வி: அவருக்கு வரைவிலக்கணம் தெரியாதென்பது புரிகிறது. உமக்கு பயங்கரவாதம் என்ற சொல் பற்றிய கருத்து உண்டா?

பதில்: அமெரிக்க அரசு, உருசிய அரசு, இனவொதுக்கல் தென்னாபிரிக்க அரசு இவை உபயோகிக்கும் பொருளில் அது எனக்கு விளங்குகிறது.

கேள்வி: ஆகவே உமக்கு தனிப்பட்ட முறையில் அந்தச் சொல் பற்றிய கருத்து இல்லை? அது எதைக் குறிக்கிறது என்பது தெரியாது? நான் வரை விலக்கணத்தைக் கேட்கவில்லை. தனிப்பட்ட முறையில் அந்தச் சொல் பற்றிய கருத்து உமக்கு இல்லை. அதைத்தான் நான் கேட்டேன். நீர் வேறு நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டீர்.

பதில்: நான் எனது ஆராச்சியின் அடிப்படையிலும், படிப்புக் காரணமாகவும் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். அது என்னவென்றால் அதுபற்றிய வரை விலக்கணம் காண முயற்சிப்பது வீண் வேலையாகும். அது எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது. ஐ.நா.சபை அதனைக் கையாண்ட முறையே சரியானதாகும். ஆனால் அமெரிக்க அரசு, உருசிய அரசு, பிரித்தானிய அரசு தங்கள் சொந்த வரைவிலக்கணத்தை வைத்திருக்கின்றன என்பதை நான் உணர்கின்றேன்.

செல்வி யக்மன்: நான் ஒரேயொரு கேள்வி கேட்கலாம் என நினைக்கிறேன்.

நீதிமன்றம்:

கேள்வி: ஒரு நிமிடம். ஆகவே, பக்கம் 104ல் நான் விளங்கிக்கொள்வது என்னவென்றால், பயங்கரவாதத்தின் குறிப்பிட்ட குணாம்சம் பயமாகும். அதாவது எங்குமுள்ள பொதுமக்களுக்கு எதிராகக் கண்மூடித்தனமானதும் பயமூட்டுவதுமான திகிலை ஏற்படுத்துகிறது....

இங்கு சட்டத்தரணி குறிப்பிட்டதுபோல நீங்கள் அரசு, எதிர் தனிநபர்கள் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்.

இது அமெரிக்க அரசு, உருசிய அரசு, இனவொதுக்கல் தென்னாபிரிக்க அரசு பற்றி நீங்கள் விளங்கிக்கொண்டதற்கு மாறானது. ஆனபடியால் இவை இரண்டும் எப்படிப் பொருந்துகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. காரணம் இதை ஒத்துக்கொண்டு நீங்கள் கையொப்பம் இட்டுள்ளீர்கள்.

பதில்: அது சரி, அந்த (ஆவணத்தின்) நடை பேராசிரியர் Falk அவர்களுடையது.

கேள்வி: ஆனால் அதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்?

பதில்: ஆனால் அதில் வரைவிலக்கணம் இல்லை. பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் இல்லை.

கேள்வி: பயங்கரவாதம் பற்றிக் குறிப்பிட்ட வரைவிலக்கணம் இல்லையென்பது எனக்கு விளங்குகிறது. ஆனால் பயம், பயங்கரவாதம் பற்றிய கருத்தின் ஒரு பகுதியாகும்.

பதில்: நிச்சயமாக, அப்படித்தான்.

கேள்வி: இது அமெரிக்க அரசு, அல்லது தென்னாபிரிக்க அரசு, அல்லது வேறு நாடுகள் தெரிவிக்கும் வரைவிலக்கணத்தை ஒத்ததா இல்லையா?

பதில்: இல்லை. மாநாட்டின் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சனையை எப்படிப்பார்த்தார்கள் என்பதைப் பொறுத்தது என்று நினைக்கின்றேன். இது முக்கியமாக பொதுமக்களது உள்ளங்களில் இருக்கும் பயத்தைப் பற்றியது.

நீதியரசர்: நன்றி, நீங்கள் கேள்வி கேட்க விரும்பினால் கேளுங்கள் நான் முடித்துவிட்டேன். ✳

முற்றும்......



# பாதிப்புக்களும் அவசர புனர்வாழ்வும்

சிங்கள அரச படைகளின் தமிழர் அழிப்பு நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ்ச்சமுதாயத்தில் "பாதிப்புக்கள்" அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. பாதிப்புக்கு உள்ளாகின்ற மக்களின் தொகையும் அதிகரித்தவண்ணம் உள்ளது. பாதிப்புக்கு இலக்காகின்ற மக்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள், அவலங்கள், மனித நேயமுள்ளவர்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. சிங்கள அரச படைகளின் கண்மூடித்தனமான ஈனச் செயல்கள் காரணமாகப் பாதிப்புக்குள்ளாகின்ற மக்களுக்கு அவசர புனர்வாழ்வுகள் வழங்கப்பட்டு ஆறுதல் அளிக்க வேண்டியது மிகவும் அவசரமும் அத்தியாவசியமான பணிகளுள் ஒன்று என்பது யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகும்.

பொதுவாக. சிங்கள அரச படைகளாலும் அவர்களது கூலியாட்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்கள் காரணமாக எமது மக்கள் தமது உயிர் உடமைகளை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டு, அகதிகளாக அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்து வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விதம் வாழ்ந்து வருகின்ற அகதி மக்களுக்கு அவசர புனர்வாழ்வுத்திட்டங்களின் கீழ் உணவுப்பொருட்கள், உடைகள், மருந்து வகைகள், போன்றவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களும் அரச திணைக்களமும் வழங்கி வருகின்றது. (அண்மைக்காலங்களில் அரச திணைக்களம் இவ்வழங்கல்களை வெகுவாகக் குறைத்தமை நீங்கள் அறிந்ததே)

இதன் மூலம் பாதிப்படைந்த மக்கள் தமது அன்றாடப் பசியையும் பட்டினியையும் போக்கிக் கொள்கின்றனர்.

ஆனால் பாதிப்படைந்த மக்களது வாழ்வும், வளமும் எதிர்காலமும் இருள் சூழ்ந்ததாகவே இருக்கின்றது என்பதை நாம் அனுபவ ரீதியாகக் காணக்கூடியதாக உள்ளது.

பாதிப்படைந்த மக்களது ஒருவழித் தேவைகள் மட்டுமே அவசர புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் பாதிப்படைந்த மக்களது உளவியல் ரீதியான தாக்கங்கள், பாதிப்புக்கள், அவற்றில் இருந்து மக்களை மீட்டெடுத்து சமுதாய நீரோட்ட வாழ்வில் அவர்களை ஈடுபடுத்த நாம் செய்யக்கூடியவற்றை இன்னமும் செய்யாமல் இருந்து வருகின்றோம் என்பதை உணர முடிகின்றது.

பாதிப்படைந்த மக்களது உணர்வுகளை அவர்களது நிலைப்பாட்டில் இருந்து அறிந்து கொண்டு, அவர்களால் முகம் நோக்குகின்ற வாழ்வுப் பிரச்சனைகளுக்கு உரிய பரிகாரங்களை நாம் கண்டறிந்து செயற்பட வேண்டும்.

மக்கள் அனுபவிக்கின்ற பாதிப்புக்களை நான்கு பிரிவுகளாகப்பகுக்கலாம்.

1. உடற்பாதிப்பு
2. உடமைப்பாதிப்பு
3. உளப்பாதிப்பு
4. எதிர்கால வாழ்வுப்பாதிப்பு

இவற்றுள்

### 1. உடற்பாதிப்பு

உடற்பாதிப்பு ஏற்படுமிடத்து அவற்றிற்கு மருத்துவ வகையான நிவாரணத்தை அவசர புனர்வாழ்வு அடி[illegible] வழங்கி உடற்பாதிப்பில் இருந்து மீட்ச பெறச் செய்யலாம்.

### 2. உடமைப்பாதிப்பு

உடமைப்பாதிப்புக்கள் ஏற்படுமிடத்து அவற்றின் நட்டங்கள், பெறுமதிகளைக்கண்டு அவற்றிற்கான நிவாரணங்களை அரசு மூலமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமோ பெற்றுக் கொள்ள முயலலாம்.

### 3. உளப்பாதிப்பு

பாதிப்படைகின்ற மக்கள் உளவியல் ரீதியாக எதிர் நோக்குகின்ற பாதிப்புக்களை அல்லது தாக்கங்களைச் சரிவர இனங்கண்டு கொண்டு அவற்றிற்குரிய நிவாரணங்களைக் கலந்தாய்வு செய்வதன் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

### 4. எதிர்கால வாழ்வுப் பாதிப்பு

பாதிப்படைகின்ற மக்களது தாக்கங்களை உளவியல் ரீதியில் ஆராய்ந்து அவர்களின் மனத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய காயங்களைச் சரியான திட்டமிட்ட வழிகாட்டல் மூலம் வழிப்படுத்திக் கொண்டால் அவர்களுக்கு அவர்களின் எதிர்கால வாழ்வில் பிடிப்பையும் திருப்தியையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் பாதிப்படைகின்ற மக்களை முழு மனிதர்களாக்கிக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்ட பாதிப்புக்களுள் மூன்றாவதாகக் குறித்துக் காட்டப்பட்ட "உளப் பாதிப்பு" விடயம் பற்றியும் நான்காவதாகக் குறித்துக் காட்டப்பட்ட "எதிர்கால வாழ்வுப் பாதிப்பு" விடயம் பற்றியும் நாம் மிகவும் கூடுதலான கவனம் செலுத்துதல் அவசரமானதாகவும் அவசியமானதாகவும் ஆகும்.

இதன் மூலம் ஆண்டாண்டு காலமாகப் பாதிப்படைந்து வாழ்கின்ற மக்களை நல்வழிப் படுத்தி அவர்களை சமுதாயத்தில் முழுமை பெற்ற சமுதாய அங்கங்களாக்க முடியும்.

இல்லையேல் பாதிப்படைந்த மக்கள் தம் வாழ்நாள் முழுவதும் நிரந்தர பயம், பீதி, படபடப்பு, துயரம், வெறுப்பு, விரக்தி தன்னம்பிக்கை அற்ற தன்மையுடன் வாழ நேரிடும்.

அதைத்தடுத்துக் கொள்ள வேண்டிய அனைத்தையும் செய்து கொள்ள வேண்டிய நேரம் இதுவாகும்.

பாதிப்படைந்த மக்களை அச்ச உணர்வுடன் வாழ நாம் அனுமதிப்போமாயின் எமது அடுத்த சந்ததியும் கூட பாதிப்படைந்த நிலையிலே தான் நிவாரணத்தை எதிர்பார்த்து மற்றவர்களில் தங்கி வாழும் நிலை ஏற்படலாம்.

பாதிக்கப்பட்ட மக்களை நிரந்தரமாக நிவாரணம் பெற்று வாழச் செய்கின்ற நிலையை மாற்றி பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்தக் கால்களில் நிலையாக நின்று தம் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

"பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு வழங்குவதை விட தொழில் ஒன்றைக் கற்றுக் கொடுப்பது மேலானது" என்பதற்கிணங்க பாதிக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, தொழில் இழப்புக்களின் அடிப்படைகளை கவனத்திற் கொண்டு சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பித்துக்கொள்வதற்கு நிதி உதவியை வட்டி இல்லாக்கடன் அடிப்படையில் வழங்குவதன் மூலம் அவர்களாகவே தம்மால் செய்யக்கூடிய சிறுதொழில்களை ஆரம்பிக்க நாம் உந்துசக்தியாக இருக்கலாம்.

அடுத்ததாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் தங்கி இருக்கும் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகளின் புனர்வாழ்வு, நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருக்கும் பாடசாலை செல்கின்ற வயதையடைந்த சிறுவர்கள் பலர் குடும்பக் கஸ்டங்களினால் தமது கல்வியைத் தொடர மேற்கொள்ள வசதிகள் இன்றி கஸ்டப்படுகின்றனர்.

இவ்வாறான சிறுவர்களை இனங்கண்டு அவர்களது கல்வியைத் தொடர புனர்வாழ்வு அடிப்படையில் உதவி செய்ய வேண்டும்.

அடுத்து பாதிப்புக்கள் காரணமாக அங்கவீனர்களாகி முகாம்களிலும் வீடுகளிலும் வைத்தியசாலைகளிலும் தங்கி இருப்பவர்களின் விபரங்களைத் திரட்டி அவர்களுக்குரிய நிவாரணப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

**வெளிநாடுகளில் வாழ்கின்ற நாம் எவ்வளவு தூரம் எமது நிதிப்பங்களிப்பை நல்கின்றோமோ அந்தளவுக்கு தாயகத்தில் புனர்வாழ்வுக்கழகத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செவ்வனே செய்ய முடியும் என்பதோடு எம்மக்களின் துயரை நாம் தான் பெரும்பங்கெடுத்துத் துடைக்க வேண்டும் என்பதை நாம் உளத்தில் கொள்ள வேண்டும்.**


அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். ஏனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

(பிரித்தானிய கிளை)

Registered Charity No: 1010029

79 Hoe Street, Walthamstow,
London E17 4SA

தொலைபேசி இல: 0181 - 520 5876


### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| **TRO** Canada: | Ph: (1416)463 7647 |
| **TRO** Denmark: | Ph: (4520)23 88 97 |
| **TRO** France: | Ph((331 46) 489 850 |
| **TRO** Germany: | Ph: (4921) 665 8508 |
| **TRO** U.K.: | Ph: (44181) 520 5876 |
| **TRO** Italy: | Ph; (39 91) 611 3179 |
| **TRO** Malaysia: | Ph: 603 255 2472 |
| **TRO** Netherlanl | Ph: 31 72 644 442 |
| **TRO** New Zealand ; | Ph: (649) 537 0258 |
| **TRO** Norway: | Ph: (47 22) 646 592 |
| **TRO** South Africa: | Ph: (27 471) 310 123 |
| **TRO** Sweden: | Ph: (4686) 87[illegible]49 |
| **TRO** Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| **TRO** U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| **TRO** Australia: | Ph:Fax:(613) 9800 3899 |




## சூரிய பார்வை

அகதியாக்கப்பட்டு, அந்நியனால்
அடித்து துரத்தப்படும் வாழ்க்கை
ஏன் எமக்கு இவ்வாழ்வு
ஏக்கத்திற்கு ஒரு எல்லை உண்டு-இக்
குழந்தையின் சூரியபார்வை-ஒருநாள்
குண்டுபோடும் கூற்றனை
கூறுபோடும்- எம் விடுதலை வேள்வி
உறுதியுடன் வெற்றிபெறும்!

*-செல்வன் மயூரன் சண்முகநாதன் (வயது-13) லண்டன்.*

## பங்கையுணர்ந்து தங்கைசுமக்கிறான்

தம்பி நீ சுமப்பது தங்கையா?
தாயக மீட்பின் உன் பங்கையா?
அண்ணா வெளிநாடு சென்றானா?
அவனுக்காயும் சுமக்கிறாயா?
கலங்காதே கண்மணியே!
குனிந்து சுமப்பது நிமிர்வதற்கே!
புலியுடன் சேர்ந்து நீ சுமந்திடவே
புதுவாழ்வு விரைவில் மலர்ந்திடுமே!

*-தருமு நளினி, யேர்மனி.*

## எப்போ மீண்டும்......

உப்புவிற்று விளையாடி-நாம்
ஒளித்துத் திரிந்த வடலியெல்லாம்
இப்போ நன்றாய் வளர்ந்திருக்கும்-இடையில்
நுங்கும் நிறைந்திருக்கும்
உப்புச்சப்பில்லா வாழ்க்கை -இன்று
உலகமுழுதும் அகதிகளாகி...
எப்போ மீண்டும் காண்போம்-அந்த
எளிமை-இனிமைமிகு வாழ்வை!

*- அமலா ஜெயந்தன்*



பல மைல் கடந்து, நாவரண்டு போனாலும்
என் தோள்மீது உனைச் சுமப்பேன்
இடிதாங்கும் பூமியும் துயர் தாங்கும் இதயமும்
இருக்கும் வரை என் கால்களும் ஓயாது!

*-சிவாவசீகரன், ஓஸ்லோ.*

## பயணம்

தாயை இழந்தோம்-எம்
தந்தையையும் தான் இழந்தோம்
ஊரை, உறவுகளை விட்டு-
நாம் பிறந்த மண்ணைவிட்டு நடக்கின்றோம்.
மனதிலே எம் தாயக சுமை
முதுகிலே பாசச் சுமை-ஆனாலும்
அடிமைச் சுமையேந்தி
அந்நியனிடம் போகமாட்டோம்!

*-திருமதி சிவகுமார், யேர்மனி.*

## அடம்பன் கொடியும்...

'உச்சு' கொட்டாதீர் அன்பரே!
மண்ணில் 'பற்று' இல்லா
கொடிகள் போல நாம்.
எனினும், நாமோ துவளவில்லை,
என்னை 'பற்றி' என் இளையவன்
எழுட்டும்-கொடிகள் திரண்டு
மிடுக்கால் நிமிரும் மண்ணில்
நீரூற்ற நினைப்பீர் - போதும்!

*-வல்வை கித்துள்*

## சுமைகள்......

பெற்று வளர்த்து பெயரிட்ட பெற்றவர்கள்
சிங்களத்தின் குண்டுக்கு மாண்டுதான் போனார்கள்
குடி இருந்த உறவுடன் அகதியாய் வந்தோம்.
கிட்டிப்புள்ளும் பம்பரமும் விளையாடிய கையும்-
புத்தகப் பையை நித்தம் சுமந்த எந்தன் தோளும்-
தங்கையே! இனி உன்னை சுமக்கும்.
ஈழம் சுமக்கும் எம் தலைவனின் இதயம்
இனி எம்மையும் சுமக்கும்!

*-திருமதி பத்மா தில்லையம்பலம், சுவிஸ்*

## கால்களும் ஓயாது

நடைபாதை எங்கும் முட்கள்தான்...
நாம் நடப்போம்-என் தங்காய்
சுதந்திரத் தென்றல் வந்து தழுவுமட்டும்
சுமைகளும் ஒரு சுகமாகுமோ?

## எம் இனிய பாலகன்

பிஞ்சுமனம் ஒன்று நொந்து செல்கின்றது
பாதகி செய்வித்த செயல்களாலே
பாலனவன் முதுகினிலே-பிஞ்சொன்று.
பாரமென்று எண்ணவில்லை -அவன்
பாசத்தால் துடித்துப் போனான்...
நானுமோர் மறவன் மகன் என்பதாலோ
தன்பங்கைத் தளராமல் செய்கின்றான்.
மறப்போமா.... எம் இனிய பாலகனை!

*-தவராசன் சித்ரா, யேர்மனி.*

## நானோர் ஏவுகணை

நாதியற்ற அனாதைகளாய் ஆக்கப்பட்டோம்
நலிந்தவெம் வாழ்வுக்கு யார் பொறுப்பாளி?
எங்களது மண்ணை ஆக்கிரமித்த எதிரியே!
சிறுவர் நாம்! எங்களோடு சினமும் வளரும்!
துன்பச் சுமைகளைத் தாங்கிப் பழகியதால்,
துளிகூட வலிக்காது தோளின் சுமை.
துள்ளித்திரியும் வயதில் பாசத்திற்குக் காவலன்
துரத்திவரும் எதிரிக்கு நாளை ஓர் ஏவுகணை!

*-தலைத்தீவான், யேர்மனி.*

## என் அன்புத் தங்கையே....!

ஏனம்மா அழுகின்றாய்? சின்னவயதிலே
சிறகொடிந்து விட்டோமென்ற ஏக்கமா?
வேண்டாம்.....வேண்டாம்...
எமக்கென்று விடிவுதேடி போராடும்
அண்ணா அக்காமாரை எண்ணிப்பார்.
இன்றோ, நாளையோ, தமிழீழம் வென்றிடுவர்.
அந்நாளில் நீ என் தோளில் அழுவாயா?
தங்க பூமியிலே தடம்பதித்து திரிவாயம்மா!

*-நா. பாமினி, பிரான்ஸ்.*

## ஆக்கங்கள் அனுப்பிய அனைவரையும் நன்றி கூர்கின்றோம்.

பத்மா நமசிவாயம்-சுவிஸ், சக்திபாலன், சாந்தி குலேந்திரன்-யேர்மனி, மா. சிவகுமார், கோமதி முருகப்பன், வ. சந்திரநாதன்-நெதர்லாந்து, புங்கையூர் த. மதி-சுவிஸ், பாலசிங்கம் முருகதாசன்-யேர்மனி, சண்முகநாதன் பிரபாகர்-யேர்மனி, திருமூர்த்தி-பாசல், திலீபன் செல்வகுமாரன்-யேர்மனி, கிரி-யேர்மனி, பிரித்தீவி சேரலாதன்-யேர்மனி, கிருஷ்ணா-யேர்மனி, தனம்-பிரான்ஸ், காரை ந. சேகர்-இத்தாலி, அக்கினி சாந்தன், கஜன், செல்வம், கே. ஜோதிலிங்கம்-சுவிஸ், ஜே. சாந்தி- சுவிஸ்.

# இத்தாலியில், சமாதான மாநாடு

யூன் மாதம் 20, 21ஆம் திகதிகளில், இத்தாலி சிசிலித் தீவிலுள்ள சிரகூட் என்னும் இடத்தில் மாநகரசபையின் ஒத்துழைப்புடன் அதன் தலைமைச் செயலகத்தில் மேற்படி மாநாடு நடைபெற்றது. இதனை சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொண்ட கலாநிதி Bruno Scicla அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

முதல் நாள் வெள்ளியன்று (20–6–97), 18.00 மணிக்கு ஆரம்பித்த நிகழ்வில், மாநகர முதல்வர் உரையாற்றினார். அவருடன் சிசிலித் தீவின் முதல்வர், மாகாண முதல்வர், அரச அதிகாரிகள், தொலைக்காட்சி முக்கிய பிரமுகர்கள், நிருபர்கள், எழுத்தாளர்கள், பெருமைக்குரிய நடிகர்கள், இசையமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். தன்சானியாவைச் சேர்ந்த பாதிரியார் RUTTA அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் அமைதி என்பது எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதை மிகவும் சுருக்கமாகத் தெளிவாகக் கூறினார். முதல்நாள் மாநாட்டில், குரேசியா, தன் சானியா. குர்திஷ், பாலஸ்தீனம், இஸ்ரவேல் போன்ற நாட்டுப் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர். விசேடமாக இத்தாலியின் பிரதான தொலைக்காட்சியான RAI சிசிலித் தீவின் பிரதான பொறுப்பாளர், தமிழீழத்தில் நடைபெறும் இனப்படு கொலைகள் பற்றி தான் அறிந்து வருவதாகவும் அங்கும் மற்றைய நாடுகளின் சமாதான உடன்படிக்கைகள் போன்று ஏற்பட எல்லோரும் உதவ வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இரண்டாம் நாள் 21ந் திகதி சனிக்கிழமை மாநாட்டில் தமிழீழம் சார்பாக வண.பிதா. எஸ்.ஜே. இம்மானுவேல் அவர்களும் சிறிலங்கா சார்பாக றெகான் குணரட்ணா என்பவரும் குரோசியா, துனுசியா, எல்சல்வடோர், பலஸ்த்தீனம், இத்தாலியத் தூதுவர் என்போர் உரையாற்றினர்.

தமிழீழம் என்ற தேசம் சார்பாக உரையாற்றிய வண.பிதா.எஸ்.ஜே. இம்மானுவேல் அவர்கள் சமாதானம் என்றால் என்ன? அதன் அர்த்தத்தை அனைத்துலகும், மக்களும் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும் தமிழீழத்தில் இன்று 22 வருட காலமாக நடைபெற்று வரும் அகிம்சை, அது முடியாத போது தவிர்க்கமுடியாமல் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசின் இன அழிப்பிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள ஏந்திய ஆயுதப் போராட்டம் பற்றியும் ஆனால் சிறிலங்கா அரசு தமிழ் மக்களையும் அதன் வரலாற்று அடையாளச் சின்னங்களை அழித்து குண்டு வீசி வரும் கொடூரத்தையும் கண்ணாற் கண்ட ஒரு சாட்சியாக தான் உலகம் முழுதும் சமாதான, தூதுவிடும் அமைப்புகளின் முன் நிற்பதாகவும் கூறினார். இரண்டு நாடுகள் என்ற அடிப்படையிலே இலங்கைத் தீவில் சமாதானமும் அமைதியும் ஏற்படவேண்டுமென்று இத்தாலிய மொழியிலே உரையாற்றினார்.

இவரைத் தொடர்ந்து றொகான் கருணாரட்ண என்னும் சிங்களத்தைச் சேர்ந்தவர் உரையாற்றினார். இலங்கைத் தீவில் நடைபெறும் இனக்கலவரங்கள் மக்களாலேயே உருவாகின்றன என்றும் எங்கும் மனிதர்கள் நான் பெரிது நீ பெரிது என்றபடியால் தான் உலகில் பிரச்சினைகள் தோன்றுவதாகவும், புத்தமதம் அகிம்சையையும் அமைதியையும் சமாதானத்தையும் தான் விரும்புகின்றது என்றும் அதில் உள்ள ஒரு சிலர்தான் மீறி நாட்டில் வன்முறையை உருவாக்குகின்றார்கள் என்றும், சிங்கள மொழியில் சமாதானம் சம்மந்தமாக மகாவம்சத்தில் எழுதியுள்ள ஒரு வரியைக் கூறினார். அனைத்து நாடுகளில் சமாதானம் வளர வேண்டும் அதற்கு எல்லோரும் என்றைக்கும் தயாராக வேண்டும் என்றும் கூறப்பட்டது. மாநாட்டில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரதிநிதிகளும், தமிழ் மக்களும் கலந்து கொண்டனர்.

22–06–97 ஞாயிறு மாலை பலேர்மோ முத்தமிழ் கலைக் கழகத்தினர் நடாத்திய ஐந்தாவது ஆண்டு விழாவிலும் வண்.பிதா அவர்கள் உரையாற்றினார். காலை தமிழீழத்தில் துன்பத்தில், துயரத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்காக, அமைதி வேண்டியும் தமிழில் திருப்பலிப் பூசை வண்.பிதா. எஸ்.ஜே இம்மானுவேல் அவர்களாலும், வண.பிதா. ஜெயரஞ்சன் அவர்களாலும் கொடுக்கப்பட்டது. ✷

## கெயர் நிறுவன பிரதிநிதி மார்க் முன்னிலையில் முல்லைத்தீவில் புதிய உணவு அளிக்கும் நிலையம்

முல்லை மாவட்ட மக்களுக்குச் சத்துணவு வழங்கலை தற்காலிகமாக வழங்குவதற்கான உணவு அளிக்கும் நிலையம் ஒன்று முல்லைத்தீவு கிழக்கில் திருமதி மைக்கேல் திவ்யமலர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த திறப்புவிழாவின்போது சர்வதேச கெயர் நிறுவன பிரதிநிதி திரு. மார்க், மாவட்ட இணைப்பதிகாரி செல்வம், மாவட்ட செயற்திட்ட இயக்குனர் இளங்கோ, கால்நடை அபிவிருத்தி அலுவலர் சேவியர், மருத்துவ அதிகாரி குணரெட்ணம், சுதேச வைத்தியர் எமிலியன், ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த உணவு அளிக்கும் நிலையம் திறக்கப் பட்டதினால், சத்துணவு இன்றி சாவுடன் போராடும் சிறுவர்கள் பயன்பெறுவர் எனக் கூறிய பெற்றோர்கள் நன்றியும் தெரிவித்தனர். ✷

## கிடுகு பின்னுவதற்கு ஏற்படுத்தப்பட்ட தடைகளால் இரண்டு மில்லியன் ரூபா நட்டம்

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளால் தென்னந்தோப்புகளும், தென்னம்பிள்ளைகளும் அழிக்கப்பட்டு வருவதினால் கிடுகு பின்னும் கைத்தொழில் மிகக் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

இதனால் இத்துறையில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான பெண்கள் தொழில்களை இழந்துள்ளனர். சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடிகளால் தொல்லையுறும் பெண்களுக்கு இது மேலும் பெருந் தொல்லையாக மாறியுள்ளது. இரண்டு மில்லியன் ரூபா

பெறுமதியான கிடுகுக் கைத் தொழில் நாசமடைந்து வருவ

தாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ✷

# யேர்மனி டிலன்பேர்க் நகரில் புனர்வாழ்வுக் கலைத் தென்றல்

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளையால் நடாத்தப்பட்ட புனர்வாழ்வுக் கலைத்தென்றலின், டிலன்பேர்க் நகருக்கான நிகழ்ச்சிகள் 02–08–97 சனிக்கிழமையன்று நடை பெற்றது.

அமைதி வணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்ச்சியில், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளையின் நடன ஆசிரியை வானதி தேசிங்குராஜா அவர்களின் மாணவிகள் நடன நிகழ்ச்சியை வழங்கினர்.

லூஸ் மாஸ்டர் புகழ் விகட விற்பன்னர் ஐசாக் இன்பராஜா அவர்கள், கேதீஸ்வரன் அவர்களுடன் இணைந்து வழங்கிய நகைச்சுவை கதம்பம், சிரிப்போடு சிந்தனையையும் தூண்டியது. முல்லை ஜெயா எழுதி, இயக்கிய மாற்றம் எனும் நாடகம் வெளிநாட்டு வாழ்க்கையின் போலித்தன்மையை வெளிப்படுத்தியது. வழமைபோல், தமிழீழம் இசைக்குழுவின் பாச இசை மழை, விடுதலை உணர்வையும் மண்பற்றையும் துயர் துடைப்புப் பணியின் அவசியத்தையும் வெளிப்படுத்தி இசையாக மலர்ந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலகச் செயலகத்தால், மறுபதிப்புச் செய்யப்பட்ட கரும்புலிகள்– உயிராயுதம்–பாகம் 1 என்ற நூல் வெளியீடும் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர், கா. சிவநாதன் அவர்கள் தனது வெளியீட்டுரையின் போது, "கரும்புலிகளின் தோற்றத்தை– வாழ்க்கையை –இலட்சிய வேட்கையை – மண்பற்றை– மனிதநேயத்தை– எல்லாவற்றுக்கும் மேலான உறுதியை நாம் அறிந்துகொள்ள எடுக்கப் பட்ட முயற்சியே இந்த நூல். பாசம் மிகுந்த, புனிதம் நிறைந்த, தியாகங்களை உள்ளடக்கிய இந்தப் புனித நூல் ஒவ்வொரு தமிழனின் வீட்டிலும் இருக்க வேண்டிய வேதப் புத்தகம் ஆகும். மனம் சலனப்படும் போது, பலவீனம் ஏற்படும் போது, நமக்கு உறுதியையும் இலட்சிய வேட்கையையும் தந்து நம்மைப் புனிதப்படுத்தும் நூல் இதுவாகும்" எனக் குறிப்பிட்டார். இதன் முதற் பிரதியை விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர் விக்னேஸ்வரன் அவர்கள் வெளியிட்டு வைக்க, நகரப் பிரதிநிதி தேசிங்குராஜா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

வானதி தேசிங்குராஜா அவர் களின் மாணவியர் தாமாகவே முன் வந்து துயர் துடைப்பு வாரத்திற்கான பங்களிப்பாக 400 யேர்மனிய மார்க்குகளை தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்களிடம் கையளித்தனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டிற்கான அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பும் நடைபெற்றது. பரிசுகளை பிராங்போட், டிலன்பேர்க் நகரைச் சேர்ந்த தமிழர் வியாபார நிலையங்களும், தமிழீழ விளையாட்டுக் கழகமும் நன்கொடையாக வழங்கின.

### பிராங்போட் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி

02–08–1997 சனிக்கிழமையன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை யேர்மனியின் உலகத் தமிழர் இயக்கம் ஒழுங்கு செய்திருந்தது. புகையிரத நிலையத்தில் ஆரம்பித்த இந்தப் பேரணி, தமிழீழத்தில் மனிதப் படு கொலைகளைச் செய்து வரும் சிங்கள இனவாத இராணுவத்தை வெளியேற்றுவதற்கு அழுத்தங் களைக் கொடுக்கும்படி கோரியும் இனப்படுகொலையைத் தொடர்ந்து செய்துவரும் சிறிலங்காவிற்கு, தமிழீழ மக்களைத் திருப்பியனுப்பும் நிலைப்பாட்டை மாற்றும் படியும் கெசன் மாநில வெளியுறவு அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்து நடாத்தப்பட்டது. பேரணியில் பங்குகொண்ட மக்கள் உணர்வுபூர்வமான கோசங்களை எழுப்பி, தமது தாயகப்பற்றை வெளிப்படுத்தினர். யேர்மனியின் உலகத் தமிழர் இயக்கச் செயலாளர் சோமஸ்காந்தன் அவர்களும் நரேந்திரசிங்கம் அவர்களும் உரையாற்றி ஆர்ப்பாட்டப் பேரணியை முடித்து வைத்தனர். சிறிலங்கா அரசின் இனப்படு கொலையையும், மனித உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டி

கெசன் மாநில அமைச்சுக்கு மகஜர்

ஒன்றும் அனுப்பப்பட்டது. ✷

## மன்னார் அகதி முகாமில் 6 குழந்தைகள் அநியாயச்சாவு

மன்னார் அகதி முகாம்கள் சனங்களால் நிரம்பி வழிகின்றன. சிறிலங்கா இராணுவம் வன்னி மீது மேற்கொள்ளும் இராணுவ நெருக்குதல்களால் இந்த முகாமில் தினமும் புதிது புதிதாக அகதிகள் சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

அம்முகாமுக்கு போதிய சுகாதார, மருத்துவ, உணவு வசதிகள் இல்லாத காரணத்தால் இங்கு தொற்று நோய்கள், ஊட்டச் சத்தின்மை ஆகியன அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்த அகதி முகாமில் ஆறு குழந்தைகள் மருத்துவ, ஊட்டச்சத்துணவு வசதிகளின்றி இறந்து போயுள்ளதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

# உண்மைக் கலை வளர்ப்பீர்!

புலர்வுக்குக் காத்திருக்கும்
பூமியிலே மக்களுக்காய்
படைமுகத்தில் அணியொன்று
விழிகள்தான் வேர்க்குதம்மா!

எழுதுமுனை ஆள்பவரும்
எழில்கலை பேணுவோரும்
கல்விப்பயிர் தேடுகின்ற
கண்மணிகள் யாபேரும்
உற்றவர் தவித்திருக்கும்
ஈனநிலை கண்டிடுவீர்!

வான் நிலவும் மலருந்தான்
வாய்த்த கருப்பொருளோ?
நீள்மேற்கின் நுணுக்கந்தான்
நின் கலை குறிப்பொருளோ?
அல்ல –
நெஞ்சிலுரம் கொண்டிடுவீர்!
நீதிகேட்டு கரங்களிலே
எழுதுகோல் தூக்கிடுவீர்!
உலகெலாம் சென்று
உண்மைக் கலை வளர்ப்பீர்!

- வதனிலா




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-36

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-19 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 376, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224